பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 13 வியாழக்கிழமை (27-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் : 53

# பெரும் தாக்குதலுக்கு புலிகள் தரப்பு முஸ்தீபு!

## அதை எதிர்கொள்ள படையினரும் தயாராம்

கொழும்பு,ஜனவரி27

**அரச படைகளுக்கு எதிராக மீண்டும் மற்றொரு பெருந்தாக்குதலுக்குப் புலிகள் தயாராகி வருவதாகத் தெரிகின்றது.**

**புலிகளின் எந்தத் தாக்குதலையும் எதிர்கொள்வதற்குப் படைத்தரப்பும் தயாராக இருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.**

பெருந்தாக்குதலுக்குப் புலிகள் தயாராகி வருவதை இராணுவ உளவுப்பிரிவினர் இராணுவ உயர் பீடத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகத் தெரிகின்றது.

அனேகமாக வடபகுதியில் இத்தாக்குதல் முயற்சியைப் புலிகள் ஆரம்பிக்கக்கூடும் என படைவட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

என்றாலும் புலிகளின் எத்தாக்குதலையும் எதிர்கொண்டு முறியடிக்கக் கூடிய முழு உஷார் நிலையில் படையினர் இருப்பதாக பாதுகாப்பு உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"புலிகளுக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அவர்கள் எதிர் பார்க்கும் எண்ணிக்கையில் தமிழ் இளைஞர்கள் அவர்களுடன் இணைவதற்குத் தயாராக இல்லை. இதனால் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள அனைவருக்கும் கட்டாய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம்,ஜன.27

நேற்று இரவு எட்டு மணியளவில் மல்லாகத்துக்கும் - ஏழாலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் படையினர் மீது கிரனேட் வீசப்பட்டதாகத் தெரியவந்தது. இந்தக் கிரனேட் வீச்சை அடுத்து சில நிமிடங்கள் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

## விமானக் குண்டுவீச்சு

தனங்களப்பு, அறுகுவெளிப் பகுதிகளில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் கிபிர் விமானத்திலிருந்து குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. (உ-15-30-139)



திருகுதாளங்களை மறைச்சு, புளுகுப் புகழாரம் சூட்டவைக்கிறதுக்குச் செய்யிற மிரட்டல் தான் பாருங்கோ உது...!

## போக்குவரத்து நேற்று முன்தினம் இடைநிறுத்தம்

வவுனியா,ஜன.27

வவுனியாவில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கான போக்குவரத்து நேற்று முன்தினம் இடம்பெறவில்லை.

இதேவேளை, இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவுக்கு வருவதற்காக வந்த பல நூற்றுக்கணக்கானோரும் பிரமணாளங்குளம் பகுதியில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

(உ-7-164)

### குமார் படுகொலை:

## 'சரந்த' என்ற பெயருடைய சந்தேகநபர் கைது!

### தேடப்பட்டவர் அவர் அல்லராம்

குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவரெனத் தேடப்பட்டு வந்த சாந்த என்பவரைத் தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால் கைதுசெய்யப்பட்டுள்ள இந்நபர் கொலை இடம்பெற்ற அன்று குமார் பொன்னம்பலத்துடன் காரில் சென்றவர் அல்லர் என்று அவரது குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

தகவல் ஒன்றின் அடிப்படையில் கொழும்பு மட்டக்குளியில் வைத்து மேற்படி நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டதாகவும் -

இந்தநபர் குமார் பொன்னம்பலத்தின் கொலையுடன் தொடர்புடைய சூத்திரதாரியா என்பது குறித்து தற்போது விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் -

இரகசியப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நபரைப் பொலிஸ் நிலையத்தில் சென்று பார்வையிட்ட - குமார் பொன்னம்பலத்தின் வீட்டில் பணியாற்றி வந்த - சிவா, தோமஸ் ஆகியோர் குறிப்பிட்ட நபர்சம்பவம் இடம்பெற்றதினம் வீட்டுக்கு வந்து குமார் பொன்னம்பலத்தை அழைத்துச் சென்றவர் அல்லர் என்று கூறி உள்ளனர்.

### அடுத்த மாத நடுப்பகுதியில்

## கண்ணிவெடி அகற்றும் பணி முழு வீச்சில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஜன.27

குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் அடுத்தமாத நடுப்பகுதியில் முழுவீச்சில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இந்தப் பணியில் ஸிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த 28 நிபுணர்கள் ஈடுபடவிருக்கின்றனர். அவர்களுடன் எட்டு மோப்ப நாய்களும் இந்தப் பணியில் ஈடுபடும்.

நிபுணர்கள் ஏற்கனவே கொழும்பு வந்து சேர்ந்துவிட்டனர். எனினும் போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் நான்கு, நான்கு பேராகவே அவர்கள் இங்கு வந்து சேருவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்தவாரம் நான்கு நிபுணர்கள் இங்கு வந்து சேர்ந்தனர். அவர்களுடன் நான்கு மோப்ப நாய்களும் கொண்டுவரப்பட்டுள்ளன.

நான்கு நிபுணர்கள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பலில் யாழ்.வந்து சேர்ந்துள்ளனர்.

கொழும்பில் தங்கியுள்ள சகல நிபுணர்களும் வந்து சேர்ந்த பின்னர் அடுத்தமாத நடுப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி முழுவீச்சில் இடம் பெறவிருப்பதாகத்தெரிவிக்கப்பட்டது.

கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்து அகற்றுவதற்குத் தேவையான நவீன கருவிகளும் இங்கு எடுத்துவரப்படவிருக்கின்றன.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் அடங்கிய வரைபடம் இராணுவத்தினரிடம்வழங்கப்பட்டுள்ளது என்றும் -

அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என்றும் -

யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-4-9)

### தாய் மற்றும் இரு பிள்ளைகள்

## உரும்பிராயில் கைதானோர் உடனடியாகக் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.27

உரும்பிராய்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மேலதிக விசாரணைகளுக்காக நேற்று கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா வளர்மதி (வயது 42) என்பவரும் அவரது பிள்ளைகளான வசாவிளான் மகா வித்தியாலய மாணவியான ஸ்ரீஸ்கந்தராஜா பிரியா(வயது 16), சந்திரோதயா மகாவித்தியாலய மாணவனான ஸ்ரீஸ்கந்தராஜா விநோத் (வயது 12) ஆகியோரே அந்த மூவருமாவர்.

இந்த மூவரது கைது தொடர்பாகவும் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது கைது தொடர்பாக பொலிஸாரால் பற்றுச் சீட்டுக்கள் எவையும் வழங்கப்படவில்லை என்றும் -

மேலதிக விசாரணைக்காக இவர்கள் மூவரும் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டமைக்கான காரணங்கள் எவையும் கூறப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## பத்திரிகைகளில் பணிபுரியும் பாடசாலை ஆசிரியர் விவரம்

### திரட்டுகிறது மாகாண அமைச்சு

அம்பாறை,ஜன.27

பத்திரிகைகள் மற்றும் செய்தி ஊடகங்களில் செய்தியாளர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களாகப் பணி புரியும் பாடசாலை ஆசிரியர்களின் பெயர் விவரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார்.

கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் திருகோணமலையில் நடைபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான மாநாட்டிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார் எனச் செய்திகள் தெரிவித்தன.

இனிவரும் காலங்களில் பத்திரிகைகளில் கட்டுரை மற்றும் தமது சுய ஆக்கங்களை வெளியிடுபவர்களும் -

நூல் வெளியீடுகளைச் செய்ய விரும்புபவர்களும் மாகாண ஆளுநருக்கு விண்ணப்பித்து அவரது அனுமதியைப் பெற்ற பின்பே செயற்பட முடியும் எனவும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை ஆசிரியர்கள் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதுவதில் காட்டும் ஆர்வத்தை பாடசாலைகளில் காட்டுவதில்லை என பெற்றோர் செய்த முறைப்பாட்டை அடுத்து ஆளுநர் தனக்கு இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார் என மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்ததாக அறியவந்தது. (உ-7-14)

### தொண்டர் ஆசிரியருக்கு நியமனம்:

## இழுத்தடிப்புக் குறித்து விளக்கம் கோருமாறு அமைச்சர் பணிப்பு!

யாழ்.மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவது இழுத்தடிக்கப்படுவது குறித்து மாகாணக் கல்வி அமைச்சிடம் விளக்கம் கோருமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தனது அதிகாரிகளைப் பணித்திருக்கின்றார்.

வடக்கில் பணிபுரியும் ஆயிரத்து 15 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும்படி ஜனாதிபதி பணிப்புரை விடுத்து பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் இதுவரை 460 பேருக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. எஞ்சியோருக்கு நியமனம் வழங்கப்படுவது இழுத்தடிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் கல்வி அமைச்சரைச் சந்தித்த ஈ.பி.டி.பி. தூதுக்குழு இது குறித்து அவரிடம் விசனம் தெரிவித்தது.

இதையடுத்தே மாகாணக் கல்விச் செயலாளரிடம் தாமதத்துக்கான விளக்கத்தைக் கோருமாறும் -

உடனடியாக சம்பந்தப்பட்டோருக்கு நிரந்தர நியமனங்களைவழங்க நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிடும்படியும் -

தனது அதிகாரிகளை அமைச்சர் பணித்தார் என அறியவந்தது. (உ)

### வெளியிடங்களுக்குச் செல்வதற்கு

## மட்டு.நகர மக்களுக்கு பாஸ் முறை இல்லை; அவர்களுக்கு விசேட அடையாள அட்டையே!

### புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச மக்களுக்கே பாஸ்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்பவர்களுக்கு வழங்கவென உத்தேசிக்கப்பட்டிருக்கும் 'பாஸ்' நடைமுறையில் சிலமாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே கூறினார்.

இதன்படி மட்டக்களப்பு நகரப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு விசேட அடையாள அட்டை ஒன்று வழங்கப்படும் எனவும் -

அவர்கள் அதனைப் பயன்படுத்தி நாட்டின் ஏனைய பாகங்களுக்குச் சென்று வரமுடியும் எனவும் - அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து நகரப் பகுதிக்குள் வருவோருக்கு மட்டுமே புதிய பாஸ் நடைமுறை அமுல்படுத்தப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

இந்தப் பாஸ் வழங்கும் திட்டத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருமித்துக் கோரிக்கை விடுக்கவுள்ளனர் என நம்பகரமாகத் தெரியவந்தது. (உ-7)

# கொள்ளையர் - பொதுமக்கள் மாத்தறைப் பகுதியில் மோதல்!

## இருவர் பலி: 9 பேர் காயம்

கொழும்பு, ஜன. 27
மாத்தறை மாவட்டத்தில் வெறவேல என்னும் இடத்தில் தெவியாய கிராமத்தில் கடந்த திங்களன்று பிற்பகல் 1.30 மணியளவில் கொள்ளைக் குழுவுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் கொல்லப்பட்டனர்; ஒன்பது பேர் காயமடைந்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள கிராமிய வங்கி ஒன்றையும், உப தபாலகம் ஒன்றையும் ஆயுதம் தாங்கிய குழு ஒன்று கொள்ளையடித்தபோது இந்த மோதல் மூண்டது.

அங்கு கொள்ளையடித்த பத்து லட்சம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பணம் ஆகியவற்றுடன் கொள்ளைக் குழுவினர் தப்ப முயன்றனர் என்றும்—

அச்சமயம் வீதித்தடைகளைப் போட்டு கொள்ளையர்களை மடக்கிப்பிடிக்க ஊர்ப்பொதுமக்கள் முயற்சித்தபோது கொள்ளைக் குழுவுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்த மோதலில் கொள்ளைக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். பொது மக்கள் தரப்பிலும் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளை போன பொருள்கள் மீட்கப்பட்டன.

(ஐ-3)


## ஆசிரியர் தேவை

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் எமிலியானுஸ்பிள்ளை தொழில் நுட்பக் கல்லூரி நிர்வாகிகளினால் நடத்தப்படும் மின் இணைப்பு, மோட்டோ வையின்டிங் பயிற்சி நெறிக்கு ஆசிரியர் தேவை.

தகுதியுள்ளவர்கள் உங்கள் விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலதிபர் பணிமனைக்கு 05 - 02 - 2000 ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பவும்.

அருட் சகோ. A.K. பற்றிக்
இயக்குநர்

தொழில் நுட்பக் கல்லூரி,
புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை. (73106)


## அன்பான நன்றிகள்

### அருள்திரு. E. J. அருமைநாயகம்

இறைபதம் அடைந்த அருமைநாயகம் அடிகள் நோயுற்றிருந்த வேளை அவரை அன்போடு பராமரித்த யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகிகள், வைத்தியர்கள், தாதிமார், உதவியாளர்கள் அனைவருக்கும் யாழ். ஆயரினதும் குருக்கள், துறவிகள், குடும்பத்தினர் அனைவரதும் அன்பான நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

I. C. U. பிரிவினர் அனைவருக்கும் எம் சிறப்பான நன்றிகள்.

அருள்திரு. J. P. E. செல்வராஜா
யாழ். மறைமாவட்ட குரு முதல்வர்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம். (சி/10827)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 30 — 07 — 1918



உதிர்வு: 26 — 01 — 1997

### இராமலிங்கம் தம்பிப்பிள்ளை

( மாதகல் நவரட்ணம், C. T. B. )

கனடா மண் தனிலே எம்மைக் காணாது
சிவன் அடியைச் சென்றடைந்து – எங்கள்
சிந்தனை நோகவிட்டுச் சென்றதேனோ?
ஆண்டுகள் மூன்று போயும்
சொல்லொணாத் துயர்தனிலே
சோர்வடைந்து நிற்கின்றோம்.

இராசேந்திரம் சேனாதி
(மகன் - தொட்டிலடி)
குடும்பத்தினர்,
செல்வரட்ணம் விஜயா (மகள்)
குடும்பத்தினர்.

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (73111)

## சமய அந்தரங்கத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 27
பன்னாலை சிவபூதவராயர் ஆலய பாலஸ்தான கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் 10 மணி வரை உள்ள சுபவேளையில் நடைபெறும்.

★ ★ ★

யாழ். பிறவுண் வீதியில் உள்ள அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேகத் திருவிழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

(உ-6)


ஆண்டு பத்துக்குரிய
புதிய பாடத் திட்டப்
புத்தகம் அலகு 4 வரை
★ சமயம் ★ தமிழ்
★ கணிதம்
பெற்றுக் கொள்ளலாம்.
விக்னா கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.
(73116)

ஞானோதய
அக்கடமி,
சாவகச்சேரி.
A/L 2002
புதிய பிரிவுகள் ஆரம்பம்
கலை, வர்த்தகம்
28-01-2000
9.00 A.M.
கணிதம், உயிரியல்
29-01-2000
1.00 P.M.
● இரசாயனம் – அன்பு
● பௌதிகவியல் – ஸ்பெல்மன்
● இ-கணிதம் தவசேகர் சிவலோகநாதன்
● உயிரியல் – ஸ்ரீபன்
● DAY CLASS
இரசாயனவியல்
வகுப்புகள்
நடைபெறுகின்றது.
(சி/10823)

ராஜா
யாழ்ப்பாணம்
அஜித் - சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
அவள் வருவாளா?
10.30, 2.30
[சி/10743]

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
O சூரியவம்சம்
(ரீல்ஸ்)
காட்சிகள் : 11.00, 2.30
(புதிய நேரம்)
[72969]

லிபேட்டி அச்சுவேலி
விஜயகாந்த்(இருவேடம்)
மீனா, பிரபுதேவா
நடித்த
வானத்தைப் போல
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10.30, 2.30
T. P. 070-212223
070-212678
(73044)


# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை குமரையா

( நவாலியூர் )

செல்லத்துரை குமரையா அவர்கள் நேற்று (26-01-2000) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

தகவல்:
S. ரமேஸ்
(பேரன்)

புலவர் வீதி,
நவாலி வடக்கு. (சி/10829)

## இராயப்பு அந்தோனிப்பிள்ளை

(அன்ரனி பாலசுந்தரம்)
(சென் ஜேம்ஸ் வீதி, வசாவிளான்)

சென் ஜேம்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் 104/10, சங்கமித்த மாவத்தை கொழும்பு — 13 ஐ வதிவிடமாகவும் கொண்ட இராயப்பு அந்தோனிப்பிள்ளை அவர்கள் 25 - 01 - 2000 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் ஞானமலரின் (செல்வா) அன்புக் கணவரும், ரஜனி (ஜேர்மனி), செல்ரா (ஜேர்மனி), தர்மிலா, கரோலின் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராயப்பு — மரியம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், திருச்செல்வம் — ஆரோக்கியம் (செல்லம்மா) ஆகியோரின் மருமகனும், அல்வின் (ஜேர்மனி), ஜேம்ஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், அனோஜன், சறோனி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அருளானந்தம் (நோர்வே), யோகம்மா, நேசமணி (சுவிஸ்), யேசுதாசன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், உதயன் பணிமனை), டேவிட் (ஜேர்மனி), றீற்றா (சுவிஸ்), வசந்தி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மரியதாஸ் காலஞ்சென்ற ஜோண், அன்ரனி (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), றீற்றா (ஜேர்மனி), ஆரோக்கியநாதர் மாகிறேற் (நோர்வே), துரைஐயா (சுவிஸ்), செபரட்ணம் (சுவிஸ்), கிளி, செல்வம் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், லில்லிமலர், பரமேஸ்வரி, ராணி, திருச்செல்வம் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும், அன்னம்மாவின் பெறாமகனும், தேவராசாவின் மருமகனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. ஆரோக்கியநாதர்
(மைத்துனர்)

இல. 2, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (73087)

## பரராஜசேகரம் இந்திரசேனன்

(லோகி)
(இளைப்பாறிய வயர்லஸ் இயக்குநர்,
பொலிஸ் திணைக்களம்)

சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட ப. இந்திரசேனன் டென்மார்க்கில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் பரராஜசேகரம் - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், நாயன்மார்கட்டு சி.கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர்) - பிள்ளையம்மா ஆகியோரின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், டென்மார்க்கில் வசிக்கும் தக்ஷியா, கஜேந்திரன், இராஜசேனன், நிஷாந்தினி, பிரகாஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவஞானவதி சற்குணசிங்கம் (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி பாலசண்முகநாதன் (கனடா), செகராஜசேகரம் (கனடா), காலஞ்சென்ற சரவணமுத்து (நேவி, சாவகச்சேரி), ஜெயராசா (முன்னாள் முகாமையாளர், அசோசியேட்டட் கேபிள்ஸ் - கல்வியங்காடு), அருந்ததி சந்திரபோஸ் (கனடா), பத்மநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26-1-2000) டென்மார்க்கில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பரராஜசேகரம்
பார்வதிப்பிள்ளை
(தாயார்)

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி. (சி/10821)

## சின்னத்தம்பி பொன்னையா

உரும்பிராய் வடக்கு உரும்பிராயைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னையா 25—01—2000 அன்று இரவு காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி—சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் சின்னையா, தம்பிஐயா, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஈஸ்வரி, இராசேஸ்வரி, மருதலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், பூபாலசிங்கம், காலஞ்சென்ற தியாகராஜா, செல்வராஜா, மல்லிகாதேவி, அம்பிகாதேவி, சாரதாதேவி (லண்டன்), தங்கராஜா (மக்கள் வங்கி, சுன்னாகம்), நடராசா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, பொன்மணி, நடராசா, கோபாலகிருஷ்ணன், தயாகுமார் (லண்டன்), தயாரூபி, ஜெயா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-1-2000) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல் 12-30 மணியளவில் எருளான் மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தங்கராசா
(மக்கள் வங்கி, சுன்னாகம்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (73095)

# குறோஸ்னி நகரில் இருந்து 10 ஆயிரம் அகதிகள் வெளியேற்றம்

குறோஸ்னி, ஜன. 27

செச்சினியாவின் தலைநகர் குறோஸ்னியின் மத்திய பகுதியில் உள்ள சதுக்கம் ஒன்றைக் கைப்பற்ற சண்டை உச்சக்கட்டத்தில் நடைபெறும் அதே நேரம் —

அங்கிருந்து அகதிகள் வெளியேறுவது தீவிரமாகியுள்ளது என்று அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த நான்கு தினங்களில் அங்கிருந்து வெளியேறிய சுமார் 10 ஆயிரம் அகதிகள் செச்சினியாவின் எல்லைப் பகுதியான இன்குஸ்ஸேசியாவில் உள்ள அகதி முகாம்களுக்கு வந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

உடுத்த உடுப்புகளுடன் மட்டும், பட்டினி நிலையில் வரும் இந்த அகதிகளை வைத்துப்பராமரிக்க போதிய முகாம் வசதிகள் இல்லை என்றும் —

அங்கு நோய்கள் பரவியுள்ளதால் அகதிகள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என்றும் — அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கூறியுள்ளது.

முகாம்களில் காசநோய் தீவிரமாகப் பரவுவதாக வைத்தியர்கள் கூறுகின்றனர். (இ-3)

# அடக்கம் செய்யமுடியாத நிலையில் 100-க்கும் மேற்பட்ட சடலங்கள்

## குறோஸ்னியில் இருந்து இடம் பெயர்வோர் தகவல்

குறோஸ்னி, ஜன. 27

செச்சினியாவில் தொடரும் சண்டைகளில் சிக்கியும், பட்டினியாலும் உயிரிழந்த நூற்றுக் கணக்கானவர்களின் சடலங்கள் எவராலும் மீட்கப்படாத நிலையில் எங்கும் காணப்படுகின்றன.

குறோஸ்னியில் இருந்து அகதிகளாக வெளியேறியுள்ள மக்கள் அங்குள்ள நிலைமை குறித்து பி. பி. ஸிக்கு பேட்டி அளிக்கையிலேயே இத்தகவலைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும்தெரிவித்துள்ளதாவது:-

அங்கு தொடரும் குண்டுவீச்சு, பீரங்கித் தாக்குதலில் சிக்கி நூற்றுக்கு , மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். வீடுகளுக்கு கீழ் அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளுக்குள் இருந்த நிலையில் கொல்லப்பட்டவர்கள் பலரும் உள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களை எடுத்துச் சென்று அடக்கம் செய்ய முடியாத நிலையில் வீடுகளின் பின்புறங்களில் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான சடலங்கள் இனத்தவர்கள் இன்றி எவராலும் எடுத்துச் செல்லப்படாமல் வீதிகளிலும், பொது இடங்களிலும் அப்படியே கிடக்கின்றன.

அதே நேரம் சிறிய சிறிய அறைகளுக்குள் மக்கள் முடங்கிக் கிடக்கின்றனர். இப்படி அவர்கள் கூறினர். (இ-3)

### கிளின்ரனின் இந்திய விஜயத்தின்போது

# தாக்குதல்களை நடத்துவதற்கு பாக். தீவிரவாதிகள் ஊடுருவல்!

புதுடில்லி, ஜன. 27

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் இந்தியாவில் விஜயம் மேற்கொள்ளும் நேரத்தில் அங்கு பெரும் தாக்குதல்களை நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளதாக உளவுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக இந்திய பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்களை நடத்தத் தீவிரவாதிகளைப் பாகிஸ்தான் இந்தியாவுக்குள் அனுப்பியுள்ளது என்றும் —

இந்தத் தீவிரவாதிகள் கிளின்ரன் பங்குபற்றும் நிகழ்ச்சிகளில் குழப்பங்களை ஏற்படுத்தவும் முக்கிய தலைவர்களைக் கொலை செய்யவும் திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்றும் —அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அண்மையில் இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் கடத்தப்பட்டமைக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகளே காரணம் என அமெரிக்கா பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருப்பதும் —

அந்த நாட்டைப் பயங்கரவாத நாடாகப் பிரகடனம் செய்யப்போவதாக அமெரிக்கா மிரட்டியிருப்பதும் —கிளின்ரனின் விஜயத்தின் போது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்படுவதற்கான காரணங்கள் என இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் கூறினர்.

அதேசமயம் — கிளின்ரனின் விஜயத்தின் போது நாட்டின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கும் என்றும் —

அதற்கு முன்னர் தீவிரவாதிகளைக் கைது செய்யப் பாரிய தேடுதல் நடத்தப்படும் என்றும்—இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-3)

# அமெரிக்காவில் 40 இந்தியர் கைது

வாஷிங்ரன், ஜன. 27

அமெரிக்காவில் பணிபுரிந்த 40 இந்தியக் கணனி வல்லுநர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டுள்ளனர் என்றும்—

**உலக அரங்கில்**

கைது செய்யப்பட்டமை கண்டிக்கப்படவேண்டிய ஒரு சம்பவம் என்றும்— அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதுவர் நரேஷ் சந்திரா தெரிவித்துள்ளார். (இ-3)

# இளம் வழுக்கைத் தலையருக்கு இருதய நோய் ஆபத்து

இளவயதில் தலைமுடி உதிர்ந்து வழுக்கைத் தலை உடையவர்களுக்கு இருதய நோய் தாக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

இரத்த அழுத்த நோய் பாரம்பரியமாக உள்ள ஒரு குடும்பத்தில் பிறந்தவராக இருந்தால் பாதிப்பு அதிகமாகும் எனவும் அந்த ஆய்வு மேலும் கூறுகின்றது.

அமெரிக்க மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்று நூற்றுக் கணக்கானவர்கள் மத்தியில் நடத்திய ஆய்வில் இருந்து இந்த விடயம் தெரிய வந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# நீதிமன்றில் ஆஜரான அன்வர் அரசுக்கு எதிராகக் குரல்!

மலேஷியாவின் முன்னாள் பிரதிப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் விசாரணைக்காக உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நிறுத்தப்பட்ட சமயம் அரசுக்கு எதிராக அவர் குரல் எழுப்பினார்.

தன்னினச்சேர்க்கைதொடர்பான வழக்குத் தொடர்பாக அவர் உயர்நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் —

''காவல் துறையினரின் செயற்பாடு நெறியற்றது: அவர்களின் நடவடிக்கைகள் மிருகத்தனமாக மாறி வருகின்றது. இவற்றுக்கு எல்லாம் காரணம் அராஜக முறையிலான அரசு தான்'' என்று பகிரங்கமாக அரசைச் சாடினார்.

அதேசமயம் — எச்சரிக்கையை மீறி அன்வரின் ஆதரவாளர்கள் சுமார் 200 பேர் நீதிமன்றத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இவர்களில் 20 பேரைப் பொலீஸார் கைது செய்தனர். (இ-3)

# இந்தியாவில் கூட்டாட்சி அரசுமுறை வேண்டும்!

## வை. கோ. கோருகிறார்

இந்தியாவின் ஒற்றுமையையும் சமத்துவத்தையும் கட்டி எழுப்ப வேண்டுமானால் கூட்டாட்சி முறைக்கு நாடு மாற வேண்டும் என்று மறுமலர்ச்சி தி. மு. க. பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டாட்சி முறையைச் செயற்படுத்த முடியாது போனதால் யூகோஸ்லாவியா நாடு சிதறுண்டது. கூட்டாட்சி முறையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளாததால் இலங்கையில் இரத்தக் களரி ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுக்குக் கூட்டாட்சி முறையே உகந்தது. நாடாளுமன்றில் சகல மாநிலங்களுக்கும் சம இடம் ஒதுக்கப்பட வேண்டும். அத்துடன் சகல மாநிலங்களுக்கும் சமத்துவமான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அதன் மூலம்கூட்டாட்சியின் பலனை மக்கள் அனுபவிக்க முடியும் — என்றார். (இ-3)

# மிரட்டல் தொனி அணுகுமுறையை பாகிஸ்தான் கைவிட வேண்டும்

## ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறுகிறார்

புதுடில்லி, ஜன. 27

''இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினைக்குத் தீர்வுகாண மிரட்டல் தொனியிலான அணுகுமுறையைக் கைவிட்டு பேச்சு மூலம் தீர்வுகாண முன்வரவேண்டும்'' என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்களைக் கேட்டுள்ளார்.

இரு நாட்டுக்கும் இடையில் உள்ள சர்வதேச எல்லையைக் கடந்து இந்தியாவுக்குள் கடந்த சனிக்கிழமை ஊடுருவிய பாகிஸ்தான் படையினர் மீது இந்தியப் படைகள் தாக்குதல் நடத்தினர் என்றும் —

பின்னர் அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர் என்றும்— ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

அதே சமயம் —இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட 18 பாகிஸ்தான் படையினரின் ஆறு சடலங்களை தமது படையினர் கைப்பற்றினர் என்றும் —

அந்தச் சடலங்களை ஒப்படைக்குமாறு பாகிஸ்தான் கோராமல் இருப்பதற்குக் காரணம் தமது படையினர் ஊடுருவவில்லை என்பதைக் காட்டுவதற்கே என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# திருக்குறள் சிறிய அளவில்!

சென்னை. ஜன. 27

'திருக்குறள்' நூலை கையடக்கம் உள்ள மிகச் சிறிய நூலாகத் தயாரித்து கோயம்புத்தூரைச் சேர்ந்த இரு இளைஞர்கள்சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

கோயம்புத்தூரைச் சேர்ந்த சக்திவேல், பாபுகர்லஸ் ஆகிய இளைஞர்களும் 2 × 1 ½ சென்ரிமீற்றர் அளவில் இந்தநூலைத் தயாரித்துள்ளனர்.

532 பக்கங்களில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நூலைப் பூதக்கண்ணாடி கொண்டே வாசிக்க முடியும்.

72 மணிநேரத்தில் இந்த நூலைத் தயாரிக்கும் பணியை நிறைவு செய்து சாதனை படைத்துள்ளனர் அந்த இளைஞர்கள். (இ-3)

# இந்தியா விஜயம்

நைஜீரிய ஜனாதிபதி ஒபசாஞ்சோ 5 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா வந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற 51 ஆவது இந்திய சுதந்திர தின வைபவங்களில் அவர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (6)

# ஜம்மு - காஷ்மீரில் மீண்டும் யுத்தம் வெடிக்கும் அபாயம்

## பி. பி. ஸி. விமர்சனம்

லண்டன், ஜன. 27

இந்தியாவின் ஜம்மு—காஷ்மீர் மாநிலத்தில் இந்தியப் படைகளுக்கும் பாகிஸ்தான் படைகளுக்கும் இடையில் மீண்டும் யுத்தம் வெடிக்கும் அபாயம் காணப்படுகின்றது என்று பி. பி. ஸி. தனது கண்ணோட்டத்தில் விமர்சித்துள்ளது.

அந்த மாநிலத்தில் வல்லன்பாலா, விஷ்ணுபட்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள இந்திய நிலைகளின் எல்லைகளைத் தாண்டிப் பீரங்கித் தாக்குதல்களைப் பாகிஸ்தான் படைகள் நடத்தி வருவதாலும் —

இருநாட்டு உயர்மட்டத் தலைவர்கள் பரிமாறிக் கொள்ளும் காரசாரமான வார்த்தைப் பிரயோகங்களாலும் —

இந்தியப் படைத்தரப்பு நவீன ஆயுதங்கள் சகிதம் படையினரை அங்கு குவித்து வருவதனாலும்—எந்த நேரத்திலும் சண்டை மூளக்கூடிய வாய்ப்பே உள்ளது என்று பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது

இந்தியன்எயர்லைன்ஸ்விமானம் கடத்தப்பட்ட விவகாரத்தின் பின்னணியில் இருந்தவர்கள் பாகிஸ்தான் தீவிரவாதிகள் என இந்தியா தொடர்ந்து கூறி வருவதால் ஆத்திரம் கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் இந்தியாவைப் பழிதீர்க்கும் வகையில் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்றும் பி. பி. ஸி. மேலும் கருத்து வெளியிட்டது. (இ-3)

## பிற்போடப்பட்டுள்ளது

தொண்டர் ஆசிரியர்கள் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் 30—01—2000 (ஞாயிறு) அன்று நடைபெறமாட்டாது. பின்னர் திகதி அறிவிக்கப்படும்.

நியமனம் பெற்ற ஆசிரியர்கள்.

(72963)



## யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் சுவட்டு மைதானப்போட்டி 2000

இடம்:- கல்லூரி மைதானம
காலம்:- 2000-1-27 வியாழக்கிழமை
பி. ப. 1-30 மணி

தலைவர்: திரு. க. புண்ணியசீலன் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
திருவாட்டி பத்தினியம்மா திலகநாயகம் போல்
(பிரதேச செயலர் தெல்லிப்பழை)

சிறப்பு விருந்தினர்:- திரு. ஆ. வ. கணேசலிங்கம்
(உதவிக் கல்விப்பணிப்பாளர்)
திரு. வி. பாலசிங்கம்
(உதவிக்கல்விப்பணிப்பாளர்-உடற்கல்வி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.
(73069)



## கண்ணீர் அஞ்சலி

18 - 01 - 2000இல் இறைவனடி சேர்ந்த
மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியை
வசிப்பிடமாகக் கொண்ட
பிரபல தொழிலதிபர்

### அமரர் செல்லையா துரைச்சாமி

விஸ்வப் பிரம குலத்தின் அதி உயர்ந்த எளம் படைத்த உத்தமரே!
வீறுடன் வாழ்க்கையில் வெற்றி நடை போட்டு
விருப்புடனே மக்களை நேசித்து வேண்டும் உதவிகள் பல செய்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உயர்ந்த தொழிலதிபரே!

உங்களது திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.
உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்; தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

திரு. சு. தம்பித்துரை
நொதேர்ண் மோட்டோர் வேக்ஸ்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/10813)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 26 — 08 — 1922



இறப்பு: 28 — 12 — 1999

### அமரர் இளையதம்பி செல்லையா

அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாக விளங்கிய எமது தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மூர்த்தி வீதி,
சங்கானை
(73037)


# பாட நூல்கள் வருவது தாமதமாவதால்
# கல்விச் செயற்பாடுகளில் பின்னடைவு

யாழ்ப்பாணம், ஜன. 27
புத்தாயிரம் ஆண்டுக்கான முதலாம் தவணை ஆரம்பிக்கப்பட்டு மூன்று வாரங்கள் கழிந்த நிலையிலும் குடாநாட்டுக்கான இலவசப் பாட நூல்கள் இன்னும் வந்து சேராத காரணத்தினால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் தாமதமடையும் நிலை தோன்றியுள்ளது.

கடந்த வருடத்தில் ஒரு தொகுதி பாட நூல்கள் ஜனவரி மாத ஆரம்பத்தில் வந்து சேர்ந்தமையால் ஓரளவுக்கேனும் கற்பித்தலை மேற்கொள்ள முடிந்ததாகவும்—

ஆனால் இந்த வருடம் ஒரு தொகுதி பாட நூல்கள் கூட இதுவரை வந்து சேரவில்லை என்றும் —

கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

இந்த ஆண்டில் 2, 7, 10 ஆகிய தரங்களுக்கு புதிய பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால் அவற்றின் பாட நூல்கள் எடுத்து வரப்படாமையால் மாணவர்கள் கல்வியை ஆரம்பிப்பது தாமதமாகி உள்ளது.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் பாட நூல்களின் விநியோகம் ஒவ்வொருஆண்டுகளிலும் தாமதமாகவே இடம்பெற்று வருகிறது. கடந்த ஆண்டில் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஒரு தொகுதி பாட நூல்களும், மே மாதம் 5 ஆம் திகதி அடுத்த தொகுதி நூல்களும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி எஞ்சிய தொகுதி நூல்களும் எடுத்து வரப்பட்டிருந்தன.

அத்துடன் கடந்த வருடம் எடுத்து வரப்பட்ட பாட நூல்களில் தற்பொழுது நடைமுறையில் இல்லாத பாடத் திட்ட நூல்களும் காணப்பட்டதாகவும் தேவையான பாட நூல்கள் முழுமையாக எடுத்து வரப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை—

பாட நூல்கள் வந்து சேராததை அடுத்து கொழும்பில் இருந்து நூல்களை 'போட்டோ ஸ்ரற்' மூலம் பிரதிபண்ணி இங்கு எடுத்து வந்து பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு பல பெற்றோர்கள் முயற்சித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

(ஐ-10)

## ஆறு கிராமிய வங்கிகள் அமைப்பதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 27
யாழ். மாவட்டத்தில் பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் ஆறு கிராமிய வங்கிகள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கிராமிய வங்கிகளில் பணியாற்றுவதற்கென மேற்படி சங்கங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 16 பேருக்கு யாழ். கூட்டுறவுச் சபையினால் மூன்று நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

சுன்னாகம், சாவகச்சேரி, கோண்டாவில் உட்பட ஆறு இடங்களில் அமைக்கப்படவுள்ளன.

சங்க அங்கத்தவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை அதிகரித்து அவர்களுக்குத் தேவையான கடனுதவிகளைக் குறைந்த வட்டியில் வழங்குவதுடன் யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு உதவும் நோக்குடனுமே இந்தக் கிராமிய வங்கிகள் உருவாக்கப்படுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-5)

## வெங்காயப் பயிர்கள் பாதிப்பு

அச்சுவேலி, ஜன. 27
கடும் பனிக்காலநிலையால் வெங்காயப்பயிர் பாதிப்படைந்துள்ளது.

அச்சுவேலி புத்தூர், ஆவரங்கால், நிலாவரை ஆகிய பகுதிகளில் இந்த நிலைமை காணப்படுகிறது.

மஞ்சள் நிறமாற்றத்திற்குள்ளாகி தாள் சுருண்டு பாதிக்கப்பட்டுள்ள வெங்காயப் பயிர்கள் எதிர்பார்த்த விளைச்சல் தராது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(சு-11)

## வளர்ப்பு நாய்களுக்கு ஊசி

நெல்லியடி, ஜன. 27
வல்வெட்டித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ளசுமார்104வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு ஊசி கடந்த வாரம் ஏற்றப்பட்டுள்ளது.

ஆதிகோயிலடி, நெடியகாடு தெணியம்பைப், பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களில் வைத்து, பொதுச சுகாதார பரிசோதகர் க. சாந்தமூர்த்தியினால் ஊசிமருந்து செலுத்தப்பட்டது.

(இ-109)

## பொது அறிவுப் போட்டிகள்

கொழும்பு, ஜன. 27
இந்து சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள கட்டுரை மற்றும் பொதுஅறிவுப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

20 மாவட்டங்களில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் அறநெறிப் பாடசாலைச் செயலாளருக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

அனுமதிப்பத்திரங்கள் கிடைக்காத மாணவர்கள் இந்துசமயப்பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-அ-4)


## CHEMISTRY
பிரத்தியேக வகுப்பு

A/L 2002& 2001
துரிதமீட்டல்
வினா • விடை
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

இடம்:-
26, கதிற்றல் வீதி.
(ஆயர் இல்லம் அருகில்)

திரு. அன்பு
(72983)



உ

## ஸ்கந்த ஹோமம்

இடம்:- உசன் கந்தசாமி கோயில்
காலம்:- 28–01–2000 வெள்ளிக்கிழமை
நேரம்:- காலை 8 மணி (பழையநேரம்)

நாட்டில் அமைதி, சமாதானம், சுபீட்சம் வேண்டி முருகப்பெருமானுக்கு விஷேட அபிஷேகம், ஸ்கந்த ஹோமம் நடைபெறும்.

சுபம்

முருகன் அடியவர்கள்.

விளம்பர அன்பளிப்பு:-
இந்திரன்ஸ் ரேடேர்ஸ்,
இந்திரன்ஸ் தொலைத்தொடர்பு நிலையம்,
போன்: 070 - 212490
பக்ஸ்: 070 - 212490
(73064) கண்டிவீதி, கொடிகாமம்.



## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
## இல்ல மெய்வல்லுநர் போட்டி 2000

இடம்: கல்லூரி மைதானம்
காலம்: 28-1-2000 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 1.00 மணி

தலைவர்:
திரு. பொ. சுந்தரலிங்கம் அவர்கள் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
திருமதி றெஜினா இருதயநாதன் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. N. சௌந்தரராஜன் அவர்கள்
(மாவட்ட சாரணர் ஆணையாளர்)
திரு. வி. பாலசிங்கம் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

கௌரவ விருந்தினர்:
துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே. பி. அவர்கள்

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– மகாஜனக் கல்லூரி சமூகம்
(73081)

# 31 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை

## உதிரிப்பாகங்கள் வருவதில் தாமதம்

யாழ்ப்பாணம். ஜன. 27
கொழும்பில் இருந்து உதிரிப் பாகங்களை விரைவாக எடுத்து வரமுடியாத நிலை உள்ளமையால் பழுதடைந்த நிலையில் உள்ள 31 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வட – பிராந்தியப் போக்கு வரத்துச் சபையின் பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார்.

பஸ்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை எடுத்து வருவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தாலும் கப்பல் போக்குவரத்துச் சிரின்மையால் அவற்றை விரைவாக எடுத்து வரமுடியவில்லை எனத் தெரிவித்த அவர் இங்குள்ள தனியார் வர்த்தக நிலையங்களில் அதிக விலையில் அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் பற்றி மத்திய போக்கு வரத்துச் சபையின் அதிகாரிகளுக்குப் பல தடவைகள் தெரிவித்த போதும் இதுவரை குறிப்பிட்ட உதிரிப்பாகங்கள் வந்து சேரவில்லை என்றும் அவை எடுத்து வரப்பட்டால் ஒரு மாத காலத்துக்குள் திருத்த வேலைகளை மேற்கொண்டு பஸ்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-10)

# 12 வருடங்களுக்குப்பின் மீண்டும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

## கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 27
பன்னிரண்டு வருடங்களுக்குப்பின் யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கீழ் நடைபெறும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்,

இந்தப்பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுத் தராதரப்பத்திர உயர்தரம் மற்றும் சாதாரண தர வகுப்புகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

(இ-5)

# நகரிலும் மற்றும் பகுதிகளிலும் வீதிகள் விரைவில் திருத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 27
யாழ். மாநகரசபை மற்றும் பிரதேச சபைகளின் கீழுள்ள சில வீதிகள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் திருத்தப்படவுள்ளன.

யாழ். கஸ்தூரியார் வீதி, பிறவுண் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, வேம்படி வீதி, மாட்டின் வீதி, திருநெல்வேலி இராமநாதன் வீதி, நல்லூர் குறுக்கு வீதி போன்ற வீதிகளே வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் திருத்தப்படவுள்ளன.

உள்ளூராட்சித் திணைக்களத்திடம் றோலர் வசதிகள் இல்லாத காரணத்தினால் இந்த வீதிகள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் திருத்தப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டன.

இந்த வீதிகளைத் திருத்துவதற்கான நிதியை விரைவில் ஒதுக்கீடுசெய்து தருமாறு வீதி அபிவிருத்தித்திணைக்களம் உள்ளூராட்சித் திணைக்களத்திடம் கோரியுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டத்தின் பல இடங்களின் பிரதேச சபைகளின் கீழிருக்கும் எட்டு வீதிகளும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் திருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

## காங்கேசன் தடுப்பு முகாமில் இருந்து

# மூன்று பெண்கள் உட்பட ஐவர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம், ஜன. 27
குடாநாட்டில் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பெண்கள் உட்பட ஐவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அச்செழுவைச் சேர்ந்த தங்கராசா சதீஸ், ஏழாலை கிழக்கைச் சேர்ந்த சண்முகராசா சுதர்சன் ஆகியோரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கும்படி நீதிவான் ஆர். ரி. விக்னராசா உத்தரவிட்டார்.

வன்னியில் இருந்து கடலேரியூடாக கடந்த நவம்பர் மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்த சமயம் கைது செய்யப்பட்ட ஏரம்பமூர்த்தி பத்மினி (நீர்வேலி மேற்கு), சண்முகம் சர்மிளா (மட்டுவில் தெற்கு), மரியதாஸ் மேரி சர்மிளா (அல்வாரை வடக்கு) ஆகியோரும் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

பிரஸ்தாப மூன்று பெண்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் ஆர். ரி. விக்னராஜா உத்தரவிட்டார்.

(ஐ-3)

## தனங்களப்பு, மறவன்புலோவில்

# நெல்லை அறுவடை செய்ய வயல்களுக்குச் செல்லத் தயக்கம்

தென்மராட்சி தெற்குப் பகுதிகளான தனங்களப்பு, அறுகுவெளி, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் அமோக விளைச்சல் கண்டுள்ள நெற்பயிர்கள் இன்னும் இரு வாரங்களில் அறுவடைக்குத் தயாராகி விடும் நிலையில் உள்ள போதிலும் இந்தப் பகுதிகளுக்குச் சென்று நெற்பயிர்களை அறுவடை செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

இது தொடர்பாகக் கைதடி விவசாயக் குழுத் தலைவர் மா. லீலாவினோதன், இப்பகுதிகளின் கிராம அலுவலர்கள் ஆகியோர் இப்பகுதிகளுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி மேஜர் ஷேரத்துடன் தொடர்பு கொண்ட போது இப்பகுதிகளை நோக்கி பூநகரியிலிருந்து ஷெல் வீச்சு நடத்தப்படாத பட்சத்தில் தாமும் பதில் தாக்குதல் நடத்தப் போவதில்லை என்று தெரிவிக்கப்பட்டதாம்.

இந்த விடயம் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் விவசாயிகள் வயலுக்குச் செல்ல இன்னும் தயங்குவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை—

சாவகச்சேரியில் இருந்து தனங்களப்பு, அறுகுவெளி ஆகிய பகுதிகளிலுள்ள வயல்களைப் பார்வையிட விவசாயிகள் எவரும் இது வரை அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-117)

# கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 27
இந்த ஆண்டுக்கான கலாபூஷணம் விருது பெறுபவர்களுக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கேட்டுள்ளார்.

இது தொடர்பான படிவங்கள் செயலகத்துக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்துள்ளன என்றும் —

பிரதேச செயலகங்களில் அவற்றைப் பெறலாம் என்றும் — மேலதிக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(இ-3)

# காணாமற்போனோர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 27
வடபகுதியில் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

மனித நேயங்களுக்கான இணைப்புப் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரிய, மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகள், சங்க உறுப்பினர்கள் ஆகியோரை இதில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது

(இ-3)

# மாணவருக்குப் பாராட்டு

வலிகாமம் தெற்கு, ஜன. 27
பல்கலைக்கழக படிப்புக்கு இந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட அளவெட்டி மாணவர்கள் கு. பிருந்தாபன், அ. அதீதன், பொ. அனுசீலன் பூ. மிதுனா ஆகியோரை அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தினர் பாராட்டிக் கௌரவித்துள்ளனர்.

நிலையத் தலைவர் இ. சிவநாயகம் தலைமையில் மேற்படி மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் இராப்போசன விருந்தும் அளிக்கப்பட்டது.

மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

(இ-152)

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 27
யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 26 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(118290ஏ), (125107ஏ), (127103ஏ), (128954ஏ), (128980ஏ), (128980பி), (128981ஏ), (128981பி), (128981சி), (128997ஏ), (128997பி), (129005ஏ), (129006ஏ), (129006பி), (129006சி), (129031ஏ), (129035ஏ), (129037ஏ), (129037பி), (129078ஏ), (129089ஏ), (129089பி), (129089சி), (129102ஏ), (129102பி), (129148ஏ), (129149ஏ), (129161ஏ), (129161பி), (129175ஏ), (129191ஏ), (129192ஏ), (129227ஏ), (129251ஏ), (129252ஏ), (129283ஏ), (129290ஏ), (129302ஏ), (129302பி), (130615ஏ), (130631ஏ), (130632ஏ), (130679ஏ), (230695ஏ), (130695பி), (130695சி), (134609ஏ), (134636ஏ), (134795ஏ),

### யாழ்ப்பாணம்

(133223ஏ), (133229ஏ), (133229பி), (133246ஏ), (133278ஏ),

### கோப்பாய்

(123153ஏ), (123153பி), (123153சி), (123162ஏ), (123964ஏ), (123964பி), (124017ஏ), (124017பி), (124018ஏ), (124057ஏ), (124057பி), (124086ஏ), (124086பி), (124086சி), (124086டி), (124086ஈ), (124097ஏ), (124097பி), (124097சி), (124097டி), (124106ஏ), (124106பி), (124108ஏ), (124108பி), (124108சி), (124158ஏ), (124158பி), (125153பி), (128107ஏ), (128116ஏ), (128116பி), (128116சி), (128116டி), (128125ஏ), (128129ஏ), (128130ஏ), (128130பி), (128143ஏ), (128147ஏ), (128154ஏ), (128154பி), [123156ஏ], [128156பி], [128164ஏ], [128164பி], [128179ஏ], [128179பி], [128248ஏ], [128248பி], (128248சி), (128248டி), (128253ஏ), (128260ஏ), (128260பி), (128260சி) (128260டி), (128260ஈ), (128269ஏ), (128285ஏ), (128285பி), (129218ஈ), (133189ஏ), (133910ஏ), (133910பி), (133913ஏ), (133952ஏ), (133952பி), (133955ஏ), (133955பி), (133987ஏ), (133987பி), 133988ஏ), (133989ஏ), (133989பி), (134043ஏ)' (134071ஏ), (134305ஏ), (134305பி),, (134308ஏ), (234308பி), (134310ஏ), (134310பி), (134310சி), (134320ஏ), (134320பி), (134320சி), (134320டி), (134323ஏ), (134323பி), (134323சி), (134340ஏ), (134341ஏ), (134341பி), (134341சி), (134341டி), (134441ஈ), (134350ஏ), (134350பி), (134350சி), (134350டி), (134354ஏ),

### நல்லூர்

(122946ஏ), (122988ஏ), (122990ஏ), (122992ஏ), (123028ஏ). (123028பி), (123028சி), (128045ஏ), (123075ஏ), (123085ஏ), (123087ஏ), (123088ஏ), (123089ஏ), (123089பி), (123089சி), (123090ஏ). (123091ஏ), (123091பி), (123091சி), (123091டி), (124266ஏ), (124344ஏ)' (124345ஏ), (124346ஏ), (124349ஏ), (128063ஏ), (128073ஏ), (128155ஏ), (128155பி), (128155சி), 128169ஏ), (128169பி), (128169சி), (128266ஏ), [128266பி], [133033ஏ], [133101ஏ], [133101பி], [133101சி], [133188ஏ]. [133209ஏ], [133219ஏ], [133222ஏ], [133228ஏ], [133230ஏ], [133260ஏ] [133281ஏ], [133281பி], [133281சி], [133286ஏ]. [133291ஏ], [133295ஏ] [120236ஏ], [128885ஏ] [129159ஏ], [129203ஏ], [129203பி], [129225ஏ], [129236பி], [129236சி]. (129236டி), (129255ஏ), (129255பி), (129256ஏ), (129256பி), (129257ஏ), (129288ஏ), (129288பி), (129333ஏ), (129333பி), (132508ஏ).

### சண்டிலிப்பாய்

(123423ஏ), (123423பி), (123423சி), (123423டி), (125433ஏ), (128902ஏ), (128902பி), (128902சி), (128928ஏ), (128928பி) (128934ஏ), (128934பி), (128956ஏ), (128958ஏ), (129009ஏ), (129019ஏ), (129150 ஏ), (129160 ஏ), (129201 ஏ), (129220 ஏ), (129226ஏ), (129231 ஏ), [129231 பி], [129231சி], [129309 ஏ], [129331 ஏ], [129331 பி], [132509 ஏ], [134517 ஏ]. [134592 ஏ], [134681 ஏ], [134695 ஏ] [134855 ஏ], [134965 பி], [134965 சி]

### தெல்லிப்பழை

[125244ஏ], [129199 ஏ], [129199 பி], [130675 ஏ], [130675 பி], [130676 ஏ],

### உடுவில்

[123818 ஏ], [123820 ஏ], [123836 ஏ], [123836 பி], [123837 ஏ], [123837 பி], [123949 ஏ], 123950 ஏ], [123950 பி], [123950 சி], [123950 டி], [123950ஈ], [123950 எவ்], [123952ஏ], [123952 பி], 123356 ஏ], [133888ஏ], [133893 ஏ], [133893 பி], [134202 ஏ], [134207 ஏ], [134207பி], [120205 ஏ], [127419 ஏ], [127419 பி], [128923 ஏ], [128945 ஏ], [128982 ஏ] (129010ஏ), (129023ஏ), (129039ஏ), (129039பி), (129093ஏ), (129093பி), (129100ஏ), (129113ஏ). (129205ஏ), (129247ஏ), (129275ஏ), (129307ஏ), (130625ஏ), (130626ஏ), (132504ஏ), (134383ஏ), (134383பி), (134383சி), (134383டி), (134817ஏ), (134818ஏ).

# அறிவுப்போட்டி

யாழ். குடாநாட்டில் உள்ள அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்களுக்காக இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள இந்து சமய அறிவுப் போட்டிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

(இ-117)

# விடுவிப்பு

ஊரெழுப் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் வெள்ளாந் தெருவைச் சேர்ந்த ரட்ணம் ரகுநாதன் (வயது 24) என்ற இளைஞன் கடந்த திங்களன்று விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் விடுவிக்கப்பட்டது தொடர்பாக இராணுவத்தினரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## பிரியாவிடை வைபவம்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ். நீதிமன்ற நீதிவானாக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள பருத்தித்துறை நீதிவான் ஆர். ரி. விக்னராஜாவின் சேவையைக் கௌரவித்துப் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் பிரியாவிடை வைபவம் ஒன்றை நடத்தியது.

இந்த வைபவத்தில் யாழ். நீதிமன்ற சட்டத்தரணிகளின் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(இ-3)

# மந்திகைக்கு கூடுதல் நோயாளர்கள் வராவிடின் எமது சேவை பலன் தராது

## எம். எஸ். எவ். சத்திரசிகிச்சை நிபுணர் சொல்கிறார்

நெல்லியடி, ஜன.27

மந்திகை மருத்துவமனையில் போதியளவு டாக்டர்கள் இன்மையால் வடமராட்சி மக்கள் அல்லற்படுகின்றார்கள் என்று எம். எஸ். எவ். தலைமையகத்துக்கு கோரிக்கை விடப்பட்டது. இதனாலேயே மீண்டும் நாம் எமது சேவையை இங்கு ஆரம்பித்துள்ளோம். ஆனால் இங்கு சத்திரசிகிச்சையை மேற்கொள்ள மிகக் குறைந்த அளவு நோயாளிகளே வருகின்றனர். இதனால் பூரணமாக எமது சேவையைச் செய்ய முடியவில்லை. எனவே இங்கு சிகிச்சை பெற அதிகளவு நோயாளிகள் வருவதையே நாம் விரும்புகின்றோம்.

இவ்வாறு எம். எஸ். எவ். சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வி வரோனிக்கா கூறினார்.

மந்திகை மருத்துவமனையில் மீண்டும் எம்.எஸ் எவ். சேவையை ஆரம்பித்து வைத்தபின் மட்டக்களப்பு அரசினர் மருத்துவமனைக்கு புறப்படவிருந்த அவர் மந்திகையிலுள்ள எம்.எஸ்.எவ். வாசஸ்தலத்தில் வைத்து உதயன் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 91 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் போர்க்கால சூழ் நிலையில் நான் இங்கு கடமையாற்றியுள்ளேன். அக்காலப் பகுதியில் வடமராட்சிப் பகுதியில் பல விதமான உயிரிழப்புகள் வீணாக இடம்பெற்றன.

இந்த நிலைமை புத்தாயிரமாம் ஆண்டிலும் நீடிக்கக் கூடாது. அனைவரும் சமாதானமாகவும் ஒன்று சேர்ந்தும் வாழ இறைவன் கருணை புரிய வேண்டும்.

தற்பொழுது நான் மட்டக்களப்பு அரசினர் மருத்துவமனையில் கடமையாற்றி வருகின்றேன். மந்திகை மருத்துவமனையில் சேவையை ஆரம்பித்து வைக்குமாறு எம் எஸ். எவ். தலைமையகம் என்னைப் பணித்ததினால் இங்கு வந்தேன்.

மட்டக்களப்பை பொறுத்தவரையில் அங்கு தினமும் 50-க்கு மேற்பட்ட நோயாளிகள் சத்திரசிகிச்சை பெற்று வருகின்றார்கள். இதனால் எமக்குத் தேவையான உபகரணங்கள், மருந்து வகைகள் ஆகியவற்றை எதுவித தடங்கலுமின்றி கூட்டுப்படைத் தலைமையக அனுமதியுடன் பெற்று வருகின்றோம்.

நான் மந்திகையில் சேவையை ஆரம்பித்து 18 நாள்கள் ஆகின்ற போதிலும், இதுவரை சுமார் 86 பேருக்கு மட்டும் சத்திர சிகிச்சை செய்துள்ளேன். நோயாளிகள் வருகை மிகக் குறைவாகவே இருக்கின்றது. நாம் சேவை செய்தோம் என்ற திருப்தி எமக்கு இல்லை.

வடமராட்சிப் பகுதி மக்களை நான் நன்கு அறிவேன். நான் அந்நியநாட்டைச் சேர்ந்தவர் என்ற நிலை இருந்தாலும், தமிழ் மக்களின் பாரம்பரிய மொழியான தமிழ் மொழியை நன்கு விரும்புகின்றேன். வடமராட்சிக்கு வந்த பின்புதான் தமிழில் கதைக்க வாய்ப்புக் கிடைத்தது. இதனையிட்டு பெருமைப்படுகின்றேன்

எனவே, டாக்டர்களுக்கு பெரும் பற்றாக்குறை இருக்கும் இவ்வேளையில், மந்திகையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் எமது வைத்திய சேவை மூலம் வடமராட்சி மக்கள் அதிக அளவு பயன் பெற வேண்டும் — இதற்கு, இங்குள்ளவர்கள், எதுவித தயக்கமும் இன்றி, போதியளவு சிகிச்சை பெறுவதற்கு அதிகளவில் மந்திகை மருத்துவமனைக்கு வருவதையே எமது வைத்தியக் குழுவினர் விரும்புகின்றார்கள்.

இங்குள்ள சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு தேவையான சில உபகரணங்களை புதிதாக இணைக்கும் பொருட்டும், முக்கிய மருந்து வகைகளை இங்கு எடுத்து வருவதற்கும், நாம் கொழும்பிலுள்ள கூட்டுப்படைத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்றோம். இதனால் எமது வைத்திய சேவை இங்கு விஸ்தரிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

எனவே நோயாளிகள் வருகை இங்கு அதிகரிக்க வேண்டும். இல்லையேல் எமது வைத்திய சேவையை மூன்று மாதகாலத்துடன் நிறுத்த வேண்டிய நிலை உருவாகலாம்— என்றார்.

(இ-109)

## தார் எடுத்து வருவது தாமதம்; வீதிகளை திருத்த முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜன. 27

கொழும்பிலிருந்து தார் எடுத்து வருவதில் ஏற்பட்ட தாமதத்தினால் யாழ். மாவட்டத்தில் வீதிகளை திருத்தும் வேலைகளும் தாமதம் அடைந்து வருவதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் திருத்தம் செய்வதற்கென மதிப்பீடு செய்யப்பட்ட பல வீதிகள் தார் இல்லாததால் திருத்தப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அண்மையில் 'மாஹோ' கப்பலில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கென 750 தார் பீப்பாக்கள் எடுத்து வரப்பட்டன. ஆனால் அக்கப்பல் கடலில் மூழ்கியதால் அவை இழக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து ஆயிரத்து 800 பீப்பா தார் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கென வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு கொழும்பில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

கப்பலில் இட ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தினால் திட்டமிட்டபடி தார் பீப்பாக்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வர முடியாத நிலையேற்பட்டுள்ளதாக மேற்படி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-5)


## மரண அறிவித்தல்கள்

### குணரட்ணம் டேவிட்செல்வராஜா

(இளைப்பாறிய நிர்வாக அதிகாரி தபாற்திணைக்களம், மூப்பர்—அசெம்பிளி ஓவ் கோட், சாவகச்சேரி)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட டேவிட்செல்வராஜா நேற்று (25—01—2000) கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் திருமதி பீஃபி. ராசலட்சுமியின் அன்புக் கணவரும் கீதாஞ்சலி, வண.ஜேசன் (பாஸ்ரர், அசெம்பிளி ஓவ் கோட் சாவகச்சேரி), ரூபாஞ்சலி, டங்கன் (S. Lon. Colombo) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பாலச்சந்திரனின் வளர்ப்புத் தந்தையும் கிறிஸ்ராநந்தன் குணரட்ணம், மதுமதி, துஷி காசிநாதர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜொ-அனா, ஜேன் ஜொனத்தன், மிஷேல் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் பூமணி அரியரட்ணம், நேசமணி கனகரட்ணம், ஞானமணி துரைசிங்கம், குணசீலன், ஜெயசீலன், தவசீலன், அதிசயமணி, ஞானசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை சாவகச்சேரி கண்டி வீதியிலுள்ள ''சரோஜினி வாசம்'' இல்லத்தில் நாளை (27-01-2000) வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு (புதிய நேரம்) நடைபெறும்.

தகவல்:
**வண. ஜேசன் செல்வராஜா**
(மகன்)

அசெம்பிளி ஓவ் கோட்,
சாவகச்சேரி.

(சி/10801)

### நடராஜா சேந்தன்

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த செல்லையா நடராஜா (இளைப்பாறிய அலுவலர், சுங்கத்திணைக்களம்) மானிப்பாயைச் சேர்ந்த பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வன் சேந்தன் 22-01-2000 அன்று துபாயில் காலமானார்.

இவர் சுனித்தாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற [illegible] னும் அமரர் செ. சண்முகராசாவின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு றேமண்ட் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கனத்தை மயானத்தில் 2000-01-26 அன்று தகனக் கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி ப. நடராஜா**
E/3/1, அன்டர்சன் தொடர்மாடி,
நரஹென்பிட்டிய.

T. P - 500334

(73101)

### பொன்னம்பலம் செல்லத்துரை

(பிரபல வர்த்தகர் நீர்கொழும்பு, தர்மகர்த்தா புங்குடுதீவு பணாவிடை சிவன் கோவில்)

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்லத்துரை 25 - 01 - 2000 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி நல்லதங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்புக் கணவரும், நித்தியானந்தன் (ஆசிரியர்), காலஞ்சென்ற சத்தியதேவி, விவேகானந்தன் (சுவிஸ்), பவானி காலஞ்சென்ற தயானி, சர்வானந்தன் (சுவிஸ்), சத்தியானந்தன் ஆகியோரின் தந்தையும், வசந்தராணி, தியாகராசா, திருப்பரன் (சுவிஸ்), ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகசபை, தங்கம்மா, நடராசா மற்றும் நேசம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று(27-1-2000) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நீர்கொழும்பு இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி நடராசா மகேஸ்வரி**
(மைத்துனி)
புங்குடுதீவு 7

செ. நித்தியானந்தன் (ஆசிரியர்),
இல. 270, பிரதான வீதி,
நீர்கொழும்பு.
T. P- 013 — 38824

(73102)



உ

ஓம் விராட் விஸ்வப் பிரமணே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் தை மாதம் 13 ஆம் திகதி (27-01-2000) வியாழக்கிழமை பகல் 11. 00 மணிமுதல் 12. 15 வரையுள்ள சித்திரை நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு. திருமதி
இராசரத்தினம்
அவர்களின் புத்திரன்
திருநிறை செல்வன்
**தர்மரத்தினம்**



திரு. திருமதி
கிருஸ்ணமூர்த்தி
அவர்களின் ஏகபுத்திரி
திருநிறை செல்வி
**நிறஞ்ஜனி**

இருவருக்கும் இறைவன் திருவருளால் மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமாங்கல்ய வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

(இரு வீட்டார் அழைப்பு)

திருமதி
நேசம்மா இராசரத்தினம்
(குடும்பம்)
பொற்தொழிலாளர் வீதி.
சங்கத்தானை, சாவகச்சேரி.

திரு. திருமதி
கிருஸ்ணமூர்த்தி
(குடும்பம்)
பிளாக் வீதி,
சங்கானை.

(73110)

## உதயன்

### வேதாளம் மீண்டும் முருங்கையில்....!

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்குத் தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் ஆணை வழங்கி உள்ளனர்.

சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம் என்பது யதார்த்தம். அதனை அரசாங்கமும் இப்போது உணர்ந்துள்ளது; ஏற்றுக் கொண்டுள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை அட்டவணைப் படுத்தி உள்ள அரசு, தான் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. அரசின் திட்டப்பிரகாரம் நான்காவது கட்டமாகவே விடுதலைப் புலிகளுடன் பேச வகை செய்யப்பட்டுள்ளது.

இப்போது முதற்கட்ட ஆலோசனைகளே நடைபெறுகின்றன. தமிழர்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்பதில் அக்கறையுள்ள சாரார் தீர்வு முயற்சிகளைக் குழப்புவதற்கு இப்போதே ஆரம்பித்துவிட்டனர். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தீர்வு முயற்சிகள் இப்போது அரும்புகின்றன எனலாம். அதே காலத்தில் குழப்பும் செயல்களும் முந்திக் கொள்கின்றன.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தக் கூடாது என்று கோரி பௌத்த பிக்குகள் கண்டியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தி உள்ளனர்; சத்தியாக்கிரகமும் அனுஷ்டித்துள்ளனர். தமக்கு ஆதரவாக நூற்றுக்கணக்கான பொதுமக்களையும் சேர்த்துக் கொண்டு இந்த எதிர்ப்பு நடவடிக்கையை பௌத்த குருமார் மேற்கொண்டிருக்கின்றனர்.

தென்னிலங்கையின் பிரதான கட்சிகள், தமிழர் பிரச்சினையைத் தமக்கு வாக்குத் திரட்டவும் அதனூடு ஆட்சியைக் கைப்பற்றவும் மாறி மாறிப் பயன்படுத்தியமை இந்த நாட்டின் பெரும் அரசியல் சாபக்கேடு! ஒரு தரப்பு தமிழர்களின் உரிமைகளை சில்லறையாக வழங்க முற்படும் போதெல்லாம், மறுசாரார் அவ்வாறுசெய்யவிடாது தடுத்து வந்தது அந்தச் சாபக்கேட்டின் அசுர வடிவம்.

குழப்பும் தரப்புக்கு கேள்வியின்றித் தாராளமாக ஆதரவு தந்து முன்னணி வகித்தவர்கள் எப்போதும் பௌத்த குருமார்களாகவே இருந்துள்ளனர். இம்முறையும் அரசு தீர்வு முயற்சிகளை ஆரம்பித்த கையோடு அதனைக் குழப்புவதற்கு அவர்களே முதலில் கொடி பிடித்துள்ளனர்.

சிங்கள மக்களில் பெரும்பாலானோர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்; போர் நிறுத்தப்பட வேண்டும் என்று விரும்பும் போது —

பேரினவாதத்தில் ஊறிப் போன ஒரு சிறு தொகையினர் அதனைக் குழப்ப முனைந்திருப்பதும், அவர்களுக்கு பௌத்த குருமார்கள் முன்னரணாக நிற்பதும் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் கதையே!

தமிழர்களின் உரிமைகளை வழங்குவது இம்முறையும் குழப்பப்படுமானால் இந்த நாடு தொடர்ந்தும், மேன்மேலும் சீரழிவதை எவராலும் தடுக்க முடியாமற் போகும். எப்போதும் அழிவுகளைச் சந்திக்கும் அபாக்கிய நாடாகவேவிளங்கும்.

இதனை இன்றைய அரசு உணர்ந்து, குழப்பங்காரச்சிகளுக்கு இடங்கொடுக்காமல், முன்வைத்த காலைப் பின் வைக்காது செயற்பட வேண்டும். அதற்கான அரசியல் துணிவும், புத்திசாதுரியமும்; வல்லமையும் ஆளுந்தரப்பிடம் உண்டா?

# எவருக்குமே பயனில்லாது கிடக்கும் நாவற்குழிப் பகுதி அரச வீடுகள்

ஒரு லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நாவற்குழி மத்திய தர வீடமைப்புத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பல வருடகாலமாக எவருக்கும் பயன்படாமல் இருக்கின்றன.

அன்றைய உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராகவிருந்த ஆர். பிரேமதாசவினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகள் இதுவரையும் எவருக்கும் வழங்கப்படவில்லை.

**செய்தி மடல்**

வீடமைப்பு அதிகார சபையின் பொறுப்பிலிருக்கும் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட ஒரு சில வருடங்களில் நாட்டில் யுத்தம் தீவிரமடையத் தொடங்கியது.

இதனால் அன்று இந்த வீடுகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டதுடன் தொடர்ந்தும் யுத்த சூழ்நிலை காரணமாக இந்தத் திட்டம் ஸ்தம்பித நிலையை அடைந்தது.

### 298 வீடுகள்

பல கோடி ரூபா செலவில் இத்திட்டத்தில் 298 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இந்த வீடமைப்புத் திட்டத்துக்கு சமீபமாக அப்போது இராணுவ முகாம் இருந்த காரணத்தினாலும் அப்பகுதியில் அடிக்கடி நடைபெற்ற மோதல்கள் காரணமாகவும் அப்பகுதி ஒரு யுத்தப் பிரதேசமாக இருந்தது.

இதனால் இந்தப் பகுதியில் மக்கள் குடியிருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

பின்னர் இந்திய அமைதிப் படையினர் இங்கு தமது முகாமை அமைத்துக்கொண்டனர். இங்கிருந்த வீடுகள் பற்றி எவரும் கவனம் எடுக்காத போதும் 1990 ஆம் ஆண்டுப் பகுதியில் உத்தியோகபூர்வமற்ற வகையில் மக்கள் குடியேறியிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பாரிய இடம் பெயர்வினைத் தொடர்ந்து இப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் எவரும் இங்கு மீளக்குடியமரவில்லை.

### பல வீடுகள் சேதம்

இத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள 298 வீடுகளில் பல வீடுகள் விமானத் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் 15 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அன்று 3 லட்சம் ரூபா பெறுமதியாக இருந்த இந்த வீடுகள் ஒவ்வொன்றும் தற்பொழுது 8 லட்சம் ரூபாவாக மதிப்பிடப்படுகின்ற போதும் வீடுகள் சேதமடைந்த நிலையிலிருப்பதனால் இவ்வாறு மதிப்பிட முடியாதுள்ளது சுட்டிக்காட்டத்தக்கது.

தேசிய வீடமைப்பு அதிகாரசபை இந்த வீடுகளை விற்பதற்குப் பலமுறை நடவடிக்கைகள் எடுத்தபோதும் விற்க முடியவில்லை என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கேசரி

இந்த வீடுகள் தாக்குதல்களினால் சேதமடைந்தது ஒருபுறமிருக்க வீடுகளின் கூரை ஓடுகள் மற்றும் கதவுகள் உட்படப் பல பெறுமதியான பொருள்களும் அவ்வப்போது திருடப்பட்டுள்ளன.

இந்த வீடுகளில் சேதமடையாத நிலையிலிருக்கும் வீடுகளை தலா எட்டரை லட்சம் ரூபா வீதமும் ஏனைய வீடுகளை சேதக்கழிவுடனும் விற்பனை செய்வதென தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கொழும்புத் தலைமைச் செயலகத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய சூழலில் இந்த விலைக்கு இங்குள்ள வீடுகளை விற்க முடியாது என்பதனால் இவற்றின் தற்போதைய பெறுமதி குறித்து அரச அதிபர் தலைமையிலான குழுவொன்றினால் மதிப்பீடு செய்யப்பட்டது.

கட்டடத்திணைக்களப் பொறியியலாளர், மதிப்பீட்டுத்திணைக்கள அதிகாரிகள் வீடமைப்பு அதிகாரசபையின் மாவட்ட பொதுமுகாமையாளர், சாவகச்சேரி பிரதேச செயலர் ஆகியோரை உள்ளடக்கிய இந்தக்குழு இந்த மதிப்பீட்டினை வீடமைப்பு அதிகாரசபைக்கு சமர்ப்பித்துள்ளது.

தற்பொழுது கூரையுடன் உள்ள வீடுகளை ஒவ்வொன்றும் ஒரு லட்சம் ரூபாவுக்கும், ஏனைய வீடுகளை அவற்றின் சேதத்துக்கேற்ப 75 ஆயிரம் ரூபா, 50 ஆயிரம் ரூபா விலைகளிலும்விற்க முடியும்எனவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு பல மாதங்களாகியும் இதுவரையும் தலைமை அலுவலகத்திலிருந்து முடிவு எதுவும் கிடைக்காத நிலையில் இந்த வீடுகளை விற்பனை செய்வது இழுபட்டு வருகிறது.

தென்மராட்சியின் நுழைவாயிலாக இருக்கும் நாவற்குழிப்பகுதியில் தற்போது புதிதாக ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற சூழலினால் இந்த வீடுகள் பற்றி தெளிவான தீர்மானம் எதுவும் எடுக்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

### யாழ். கரையோரப் பகுதி மீதான

## ஷெல் வீச்சை நிறுத்துமாறு புலிகளிடம் ஆயர் கோரினார்

யாழ்ப்பாணம், ஜன. 27

குடாநாட்டின் கரையோரப் பிரதேசம் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளிடம் யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் நேரில் கோரியுள்ளார்.

வன்னி சென்றிருந்த சமயம் இந்தக் கோரிக்கையை புலிகளிடம் தாம்நேரடியாக விடுத்ததாக ஆயர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கரையோரப் பகுதியை நோக்கி ஏவப்படும் ஷெல்கள் பொதுமக்களின் வாழ்விடங்கள் மீது வீழ்ந்து வெடிக்கின்றன. இதனால் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு அந்தத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று தாம் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளிடம் கோரியதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## சாயி சிந்தனை

தெய்விகக் கருணைதான் உண்மையான செல்வம். அதைச் சேகரித்துக்கொள்ளுங்கள். மற்ற எல்லாவற்றையும் அடைந்தவர்களாவீர்கள். ஒழுக்கம், சீலம் இவை முக்கியம். பணம் முக்கியமல்ல. ஆனால் மனிதன் செல்வத்தின் பின்சென்று நேரத்தை வீணடிக்கிறான். பணம் தேவைதான். ஆனால் அது சில குறிப்பிட்ட அளவுக்குள் இருக்க வேண்டும். மற்றவருக்கு சேவை செய்வதில் உங்கள் நேரத்தைச் செலவழியுங்கள். உங்களது உற்ற நண்பர்களை, உங்களைச் சூழ்ந்திருக்கும் மனிதர்களை முதலில் நேசிக்கத் தொடங்குங்கள். இறைவனிடம் சரணடையுங்கள். தெய்வீக அன்பை மிஞ்சியது எதுவும் இல்லை. இவ்வுலகம் முழுவதும் அன்பினாலேயே சூழப்பட்டிருக்கிறது.

வேதங்கள் உரைக்கின்றன. அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் திதக (இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான்) அனைத்துப் பெயர்களும், வடிவங்களும் அவருடையதே. பெயர்களும் வடிவங்களும் வேறுபடலாம். ஆனால் ஆத்மா என்பது அனைவருக்கும் ஒன்றே. அனைத்து ஜீவராசிகளிடமும் இருக்கும் இந்த ஒற்றுமையை உணர்ந்து கொள்ளுங்கள். அது பிரபஞ்ச அன்பினை உருவாக்கும். இந்த உலகம் ஒரு பெரிய மாளிகை. அனைத்தும் மனித குலத்துக்குச் சொந்தமானவை. இந்த மாளிகையில் ஒற்றுமை நிறைய வேண்டும்.

ஆதாரம்:- சனாதன சாரதி

## சுழிபுரம் சுடலையில் பெண்ணின் ஆடைகள்!

மூளாய், ஜன. 27

சுழிபுரம் கிழக்கு ஊமைக் கேணியடிச் சுடலையடியில் பெண் ஒருவருக்குரிய மஞ்சள் நிறச்சட்டை, உள்பாவாடை, மார்புக்கச்சை ஆகியவை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித நடமாட்டமற்ற, புதர்கள் நிறைந்த அந்தப் பகுதிக்கு கிராம சேவையாளர் ஒருவரும் மற்றும் சிலரும் திங்கள் காலை சென்று தேடுதல் நடத்திய சமயம் மேற்கண்ட உடைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பகுதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை விறகு பொறுக்கச் சென்ற நான்கு பெண்களில் ஒருவர் திரும்பி வரவில்லை என்றும் —

மறுநாள் பெண் ஒருவரின் சடலம் அப்பகுதியில் காணப்பட்டதாகவும் —

பின்னர் அந்தச் சடலமும் காணாமற்போய் இருந்ததாகவும் — சுழிபுரம் பகுதியில் பரவலாகப் பேசப்பட்டு வந்தது.

இதனை அடுத்தே குறிப்பிட்ட பகுதிக்கு இவர்கள் திங்களன்று சென்ற போது மேற்கண்ட உடைகளைக் கண்டுபிடித்தனர்.

உடைகள் காணப்பட்ட இடத்துக்கு அருகில் சுழிப்புச் செய்து போடப்பட்டதாக நம்பப்படும் சில உணவுப் பொருள்கள் சுடகம் ஒன்றில் காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

விறகு பொறுக்கச் சென்ற பெண்களில் ஒருவர் காணாமற் போனதாகவும், அடுத்த நாள் அப்பகுதியில் சடலம் ஒன்று கிடந்ததாகவும் சுழிபுரம் பகுதியில் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்த போதிலும் தமது உறவினர் எவராவது காணாமற் போனதாக இதுவரை எவரும் தம்மிடம் முறைப்பாடு செய்யவில்லை என்று சுழிபுரம் கிழக்கு கிராமசேவையாளர் தெரிவித்தார்.

பெண்கள் அணியும் உடைகள் எப்படி அந்த மனித நடமாட்டமற்ற சுடலைப் பகுதிக்கு வந்தன என்பது இன்னும் மர்மமாகவே இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-99-133)

## நாளை

தை 14

வெள்ளிக்கிழமை

திதி: அட்டமி

வைகறை 6.26 வரை.

நட்சத்திரம்: சுவாதி

வைகறை 5.25 வரை.

சுபநேரம்: 6.36—8.06

ராகுகாலம்: 11.06—12.36

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ஜெயந்தி தினம்

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 5 மணி முதல் விவேகானந்தர் ஜெயந்தி தினவிழா நடைபெறவுள்ளது. (இ-7)

### உதய வாக்கு

''எனக்குத் தெரியாது'' என்று சொல்வதைப் போன்ற அவசியமான கண்டுபிடிப்பு, வேறு உண்டு என எனக்குத் தோன்றவில்லை. தெரியாததைத் தெரியாது என்று சொல்வதில் தவறும் இல்லை; நஷ்டமும் இல்லை.

- ஸாமர்ஸெட்மாகம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறி விட்டது

13 – 1 – 2000 அன்று வண்ணார்பண்ணை சிவன்கோயிலுக்கும் யாழ். பஸ் நிலையத்திற்கும் இடையில் வை. தவராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (783603322V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 15, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (73062)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள யமகா — 80 மோட்டார் சைக்கிள் (நியூஸ்மேற்) உடன் விற்பனைக்கு உண்டு. (2000 ஆம் ஆண்டு வரி கட்டியுள்ளது). தொடர்பு: சோ. சிவராஜா 97, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (73092)

நல்ல நிலையில் உள்ள Shriram Honda E. 650 K ஜெனரேற்றரும், மரத்தளபாடங்கள் செய்வதற்குரிய Band Saw உபகரணமும், CD 100SS Hero Honda மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 67, செட்டித்தெரு, நல்லூர். (73035)

## ஜோதிடம்

கணனி மூலம் தமிழில் ஜாதகங்களைத் துல்லியமாகக் கணிப்பதற்கும் பலனை அறிவதற்கும் எண் ஜோதிடம் பார்ப்பதற்கும் பிறந்தநேரம், ஊர், பெயர் இவற்றுடன் தொடர்பு கொள்ளும் முகவரி: க. கிருபானந்தக் குருக்கள், பருத்தித்துறை வீதி, கிராம்புவில், சாவகச்சேரி. TP & FAX 070—212300 [73020]

## தென்னம் நாற்றுகள்

உடன் நடுகைக்கு உகந்த (குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய வத்தா விகள் உட்பட) தென்னம் நாற்றுகளும் அத்துடன் அம்பலவி, கிளிச்சொண்டன், விலாட் மாங்கன்றுகளும் விற்பனைக்கு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. (சி/10739)

## நூல் வெளியீடு

ஸ்ரீராம தரிசனக் காட்சியை இசையில் கண்ட நாதஜோதி ஜகத்குரு தியாகராச சுவாமிகளுக்கு வணக்கம் செலுத்தும் முகமாக பகுள பஞ்சமி தினமான அவரது நினைவு தினத்தில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிகளின் கலை மன்றத்தின் சார்பாக ''தியாகப்பிரம்மம்'' என்ற நூல் வெளியீடு இடம் பெற்றது.

கல்லூரி இசை ஆசிரியர் கே. எஸ். சிவஞானராசா, இசை மாணவர்களின் மேம்பாடு கருதி மேற்படி நூலை உருவாக்கி வெளியிட்டார். (இ-152)

# தேவை

பதியில் இடப்பட்ட மாங்கன்றுகளை ஒட்டுவதற்கு கைதேர்ந்த ஒட்டுநர் ஒருவர் தேவை கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**விளம்பர இல. 993**
**மே/பா உதயன்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(73099)

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
ஷி பொதுச்சபை அங்கத்தவர்களின்

# வருடாந்தப் பொதுக் கூட்டமும் 2000 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைத்தெரிவும்

(26 - 02 - 2000)

ஷி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் 26 — 02 — 2000 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு (ப. நே) சங்கத் தலைவர் திரு. பொ. தவராசலிங்கம் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் (317, பிரதான வீதி, யாழ்ப்பாணம்) நடைபெற விருக்கின்றதென்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உபவிதி 26 இல் 7 வதின் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏதாவது பிரேரணையை பிரேரிக்க விரும்பின் அப் பிரேரணைப் பிரதியொன்றை 16—02—2000 க்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறமாட்டாதென்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பொ. தவராசலிங்கம்** — மாவட்ட தலைவர்.
**வி. சொலமன்** — மாவட்ட செயலாளர்.

(சி–10820)

யாழ். மாவட்ட

# TELEPHONE DIRECTORY
# தொலைபேசி எண் பட்டியல்

01 - 08 - 1999 வரை

பெறுமிடம்:

**இன்ரறக்ட் கழகம்**
வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/ 10818)

தனியார் கல்வி நிறுவனங்களின்
முன்னோடியாக விளங்கிய

# அமரர் க. ஆனந்தக்குமார்
(BOND MASTER)

அவர்களின் ''நினைந்துருகல்''

நிகழ்வு ஒன்றினை நடத்துவது தொடர்பான கலந்துரையாடலில் சகல தனியார் கல்வி நிறுவன சமூகத்தினர் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இடம்: சயன்ஸ் ஹோல்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
காலம்: 28 - 01 - 2000 (வெள்ளி)
பி.ப. 4.30 (S.L.T)

(73100) நண்பர்கள்

# சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,
திருநெல்வேலி.

# பதவிகள் - வெற்றிடம்

கீழ்க் காணும் பதவிகளுக்குப் பொருத்தமான வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விடுதிக்காப்பாளர் (பெண்)**
இத்துறையில் அனுபவம் உடையோருக்கு முன்னுரிமை தரப்படும்.
வயதெல்லை: 40 — 60
கல்வித்தகைமை: க. பொ. த. (உயர்தரம்)

**உபவிடுதிக் காப்பாளர்:**
(ஆண் - 1, பெண் - 1)
வயதெல்லை: 35 — 55
கல்வித்தகைமை: க. பொ. த. (உயர்தரம்)

**புறநிலைக் கற்பித்தலுக்கு ஆசிரியர்கள்** (பகுதி நேரம்)

க. பொ. த. (சா/த) — தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, தையல், சங்கீதம்.
தகைமை — அந்தந்தத் துறைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.
க. பொ. த. (உ/த) — தமிழ், இந்து நாகரிகம், பொருளியல், வர்த்தகம், ஆங்கிலம்.
தகைமை — பட்டதாரிகள் / சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொண்டிருப்போர்.

குறிப்பு:— ஊதியந்தரும் ஒரு தொழிலாக அன்றி, தொண்டாக-அர்ப்பணிப்புடன்-பணியாற்றுவோரே விண்ணப்பிக்க வேண்டும். எனினும் கணிசமான தொண்டுநியம் பேசி நிர்ணயிக்கப்படும்.


விண்ணப்பங்களை எதிர்வரும்
05 - 02 - 2000க்கு முன் செயலாளர்,
சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர்,

சோ. பத்மநாதன்
செயலாளர்.

(சி/10819)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

# பொன்னையா ஆறுமுகம்

(உரிமையாளர், ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ், 20, பெரியகடை, யாழ்ப்பாணம்.)

தவப்பேறு 01—02—1924 சிவப்பேறு 28—12—1999

வாழ்வில் ஒளியேற்றி நாம் வாழ வழி அமைத்தாய்
உழைப்பில் உயர்வு தந்து உள்ளத்தில் உறைந்துவிட்டாய்
உயிரிங்கே துடிக்குதைய்யா உன்னைப் பிரிந்து வாடுதைய்யா
பாசத்தின் பிறப்பிடமே பரிதவிக்கின்றோம்
நீங்களின்றி மாதமொன்று நிறைவான வேளையில்
இன்று ஒன்றாகக் கலந்திருக்க வாருமைய்யா!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

15/1. 1 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [73107]

# G. A. Q. 1ST IN Com. (யாழ்./பேராதனை) வெளிவாரி

★ இந்தக் கற்கை நெறிக்கு G. C. E. (A/L) (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம்) ஆகிய பாடநெறிகளில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.
★ இதற்குரிய பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

B. A. Part - I
B. A. Final
B. Com. Part - I

யாழ். இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன,

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

விவரங்களுக்கு:
**S. அருள்நங்கை**

(73091)




# புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தை மீண்டும் திறக்கப் படையினர் அனுமதி

## சுகாதாரப் பகுதியினர் பின்னடிப்பதாக விசனம்

யாழ்ப்பாணம், ஜன. 27
தெல்லிப்பழையில் உள்ள புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தினை மீண்டும் திறந்து இயங்கச் செய்வதற்குப் பாதுகாப்பு வட்டாரங்கள் அனுமதியளித்துள்ள போதிலும் சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் பின்னடித்து வருவதாக அறியப்படுகிறது.

கடந்த கால வன்செயல்களினால் சேதமடைந்த நிலையிலுள்ள அந்தச் சிகிச்சை நிலையத்தைப் புனரமைத்து மீண்டும் இயங்கச் செய்யுமாறு யாழ்ப்பாணத்திலுள்ளபொது அமைப்புகள் ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

தொடர்ச்சியான வேண்டுகோள்களை அடுத்து இந்தச் சிகிச்சைநிலையத்தினை மீண்டும் இயங்கச் செய்யும் பொருட்டு மருத்துவ அதிகாரிகள் கொண்ட குழுவொன்று சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இப்பகுதிக்கு அனுப்பப்பட்டு மதிப்பீட்டு வேலைகள் இடம்பெற்றன.

சிகிச்சை நிலையத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட இந்தக் குழு, புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தினை மீண்டும் இயங்கச் செய்வதற்கு 4 கோடி 80 லட்சம் செலவாகும் எனத் தெரிவித்து மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைச் சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்திருந்தது.

இந்த மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஆறுமாதங்களுக்கு மேலாகியும் இதுவரையும் இது குறித்து மேற்படி திணைக்களத்தினால் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

சுகாதாரத் திணைக்களத்தின் இந்த அசமந்தப் போக்குக் குறித்து யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன. (ஐ-5)

# டாக்டர்கள் வெளியேறியதால் மார்பு நோய் சிகிச்சை பாதிப்பு

சாவகச்சேரியில் உள்ள மயிலிட்டி மார்பு நோய்ச்சிகிச்சை ஆஸ்பத்திரி மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ளமார்பு நோய் சிகிச்சை நிலையம் போன்றவற்றில் டாக்டர்கள் இல்லாமையினால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு கடமையாற்றிய இரு தென் பகுதி டாக்டர்களும் கடந்த டிசெம்பரில் யாழ்ப்பாணத்திலே ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து கொழும்புக்குத் திரும்பிச் சென்றுள்ளனர்.

இவர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதால் மார்பு நோய்களுக்கு சிகிச்சை பெறவேண்டியோர் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ-5)

# சட்ட, முகாமைத்துவ பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 27
இரண்டாயிரம், இரண்டாயிரத்தி ஓராம் கல்வியாண்டுகளுக்தான முகாமைத்துவ டிப்ளோமா சட்டமானி கற்கை நெறிகளுக்கான அனுமதிப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து தோற்றியவர்களில் 90 பேர் சித்தியடைந்துள்ளனர்.

சட்டமானி துறையில் 14 பேரும், முகாமைத்துவ டிப்ளோமானி துறையில் 76 பேரும் சித்தியடைந்துள்ளனர். இவர்களின் பெயர்ப் பட்டியல்கள் யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களை திறந்த பல்கலைக்கழகத்துக்கு நேரில் வந்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு பதிவாளர் கேட்டுள்ளார். (ஐ-5)

# ஆபிரிக்க சுழல் பந்தாளர் பற் சிம்கொக்ஸ் ஓய்வு

கேப்டவுன், ஜன. 27
தென்னாபிரிக்க அணியின் சுழல் பந்து வீச்சாளர் பற் சிம்கொக்ஸ் அனைத்து சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தனது 33 ஆவது வயதில் சர்வதேசக் கிரிக்கெட் உலகுக்கு வந்த சிம்கொக்ஸ் ஐந்து வருடங்களாக தென்னாபிரிக்க அணிக்காக விளையாடியவர்.

20 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 37 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். 471 ஓட்டங்களை எடுத்துள்ளார். பாகிஸ்தான் அணியுடன் இவர் அடித்த 108 ஓட்டங்களே டெஸ்ட் ஆட்டத்தில் இவரது அதிகூடிய தனி நபர் ஓட்ட எண்ணிக்கை ஆகும்.

மார்க்பௌச்சர்-சிம்கொக்ஸ் இணைபெற்ற 195 ஓட்டங்கள் ஒன்பதாவது விக்கெட்டுக்குரிய டெஸ்ட் ஆட்ட உலக சாதனையாகும்.

டெஸ்ட் ஆட்ட வரலாற்றில் கடைசி துடுப்பாட்டக்காரராகக்களமிறங்கி சதம் அடித்த வீரர்களில் சிம்கொக்ஸ் மூன்றாமவர்.

எண்பது ஒரு நாள் போட்டிகளில் விளையாடிய இவர் இளைய வீரர்களுக்கு அணியில் சந்தர்ப்பம் அளிப்பதற்காகவே அண்மைக்காலமாக அணியில் தன்னை இணைத்துக் கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ஐ-8-4)

## கூடைப் பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜன 27
விளையாட்டு அமைச்சினால் யாழ். மாவட்ட ரீதியாக கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரியில் இன்று நடைபெறும் ஆண்கள் பிரிவு ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3-30மணிக்கு யாழ். பல்கலைக்கழககோல்ட் அணி எதிர் ஒல்ட் கோல்ட் வி, க. சிவப்பு அணி.

★ பிற்பகல் 4-30மணிக்கு ஜொனியன்ஸ் வி. க. அணி எதிர் பற்றீஸியன் வி. க. கோல்ட் அணி,

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் சுவட்டு மைதானப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-4-8)

# ஆசிய - உலக வீரர்கள் மோதும் போட்டி ஏப்ரலில்

டாக்கா, ஜன. 27
ஆசிய வீரர்கள் அடங்கிய கிரிக்கெட் அணிக்கும் ஏனைய உலக நாடுகளின் வீரர்கள் அடங்கிய கிரிக்கெட் அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியொன்றை பங்களாதேஷ் நடத்தவுள்ளது.

இந்தக் கிரிக்கெட் போட்டி ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி டாக்கா விளையாட்டரங்கில் நடைபெறும்.

தற்போது மலர்ந்துள்ள இந்தப் புதிய ஆயிரமாம் ஆண்டில் கிரிக்கெட் ரசிகர்களிற்கு ஒரு பெரு விருந்தினை 'மிலேனியம்' பரிசாக வழங்குவதற்காகவே இந்தப் போட்டியை ஒழுங்கு செய்துள்ளதாகப் பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. (ஐ-4-8)

## இளைஞர் உலகக் கிண்ணம்

# நாளைய இறுதி ஆட்டத்தில் பலம்மிக்க இரு அணிகள்

கொழும்பு, ஜன. 27
நாளை கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் நடைபெறவுள்ள இளைஞர் உலகக் கிண்ணப் போட்டிக்கான இறுதி ஆட்டத்தில் இலங்கை, இந்திய அணிகள் மோதவுள்ளன.

கடந்த 24 ஆம் திகதி காலி சர்வதேசவிளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை அணியும் பாகிஸ்தான் அணியும் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக அமைந்த இந்த அரையிறுதி ஆட்டத்தில் 11 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியை வென்று இறுதி ஆட்டத்துக்குத் தெரிவானது இலங்கை அணி.

கடந்த 25 ஆம்திகதி பி. சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இந்திய, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் நடைபெற்றது இறுதி ஆட்டத்தில் விளையாட வேண்டும் என்ற உறுதி இந்திய அணியின் துடுப்பாட்டம், பந்து வீச்சு களத்தடுப்பு ஆகியவற்றில் தெளிவாகத் தெரிந்து. ஒரு போதும் இல்லாதவாறு இந்திய அணி சிறப்பாக விளையாடி 170 ஓட்டங்களால் ஆஸ்திரேலிய அணியை வென்று இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கு தகுதி பெற்றது.

நடைபெற்று முடிந்த அரையிறுதி ஆட்டங்கள் மூலம்இறுதிப் போட்டிக்கு தெரிவான இலங்கை, இந்தியா ஆகிய அணிகள் இரண்டுமே பலம் மிக்கவை. எனவே நடைபெறவுள்ள இந்த இறுதிப் போட்டியின்முடிவுகள் பற்றி எதிர்வு கூறுவது முடியாத காரியம் என கிரிக்கெட் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

எது எவ்வாறிருப்பினும் 16 நாடுகள் பங்குபற்றிய இந்த இளைஞர் உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தினை உலகெங்கும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் பெரும் ஆவலுடன் எதிர் பார்த்தவண்ணம் உள்ளனர். (ஐ-4-8)

## ஆஸி-இந்திய அணிகள் இன்று மோதல்

மெல்பேர்ன் ஜன. 27
ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் மூன்றுநாடுகள் பங்குபற்றும் கால்ட்டன் அன் யுனைட்டெட் கிரிக்கெட் போட்டித்தொடரில் இன்றைய ஆட்டத்தில் இந்திய ஆஸ்திரேலிய அணிகள்மோதவுள்ளன.

இந்த ஆட்டம் அடிலைட்டில் உள்ள மைதானத்தில் பகல்—இரவு ஆட்டமாக நடைபெறும். (ஐ-4-8)




# புலிகளால் மீட்கப்பட்ட பிரதேசத்தில் யுத்தக் கோரத்தின் வடுக்கள் பல!

## வன்னி சென்று திரும்பிய யாழ். ஆயர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜன. 27
''வன்னியில் 'ஓயாத அலைகள் 3' நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பிரதேசங்கள் யுத்த கோரத்தின் வடுக்களாகக் காட்சி தந்தன'' என்று யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு அண்மையில் சென்று திரும்பிய அவர் அங்குள்ள நிலைமை குறித்து மேலும் தெரிவித்ததாவது:

மடுவில் இருந்து பாலம்பிட்டி, பெரியமடு வரையான பிரதேசத்தில் வீதியை மூடி நின்ற காட்டு மரங்களைக் காணவில்லை. வீதியின் இருமருங்கிலும் காடுகள் வெட்டப்பட்டு அந்தப் பிரதேசம் வெளியாகக் காட்சி அளித்தது.

ஒட்டுசுட்டானில் இருந்து மாங்குளம் வரையான பாதையால் சென்றேன். அங்கு முன்பு இருந்த கட்டடங்கள் காணப்படவில்லை. எல்லாம் இடிந்து யுத்தத்தின் கோரத்தை வெளியிடும் அழிவுச் சின்னங்களாகக் காட்சி தந்தன.

படையினரின் பங்கர்கள் இடிந்து வீழ்ந்து கிடக்கின்றன. முள்ளுக்கம்பிகள் எங்கும் பரவிக் கிடக்கின்றன.

ஒட்டுசுட்டானில் உள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் சேதமடைந்து காணப்பட்டது. ஆலயத்தின் கோபுரமும் சேதம் அடைந்துள்ளது.

அந்தப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்த போதும் பெரியளவில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை.

வன்னிப் பிரதேசம் பெரிய அளவில் அழிவுக்குள்ளாகி இருப்பதால் புனரமைக்கப் பல காலம் செல்லும்.

அங்குள்ள வீதிகளின் நிலைமையைப் பார்க்கும் போது புனரமைப்பு என்பது அண்மைக் காலத்தில் நடக்கும் வாய்ப்பு இல்லை என்றே தோன்றுகின்றது.

வன்னிப் பிரதேசங்களுக்கு உணவுப் பொருள்கள் போதியளவு வந்து சேராததாலும் ஒழுங்கான முறையில் அனுப்பப்படாததாலும் உணவுப் பிரச்சினை பெரிய அளவில் காணப்படுகின்றது.

அரிசி ஒரு கிலோ 50 ரூபாவுக்கு விற்பனையாகின்றது. அதுவும் தொகையாக வாங்க முடியாது.

அங்கு விளைந்த அரிசி களஞ்சியப்படுத்தப்படாததாலும் —

அரச அதிபர்கள் அரிசியை வாங்கி நிவாரணம் வழங்கியதாலும் —

பெரிய அளவில் அரிசி வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டதாலும் — அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

போதியளவு மண்ணெண்ணெய் அங்கு வந்து சேராததால் மண்ணெண்ணெய்க்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் நூற்று இருபத்தைந்து ரூபாவுக்கு விற்பனையாகின்றது—

இப்படி ஆயர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## உயர் அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மை பின்னடைவுக்கு காரணம்

### விசாரணைக் குழு அறிக்கை தகவல்

கொழும்பு, ஜன. 27
அண்மையில் வன்னியில் படையினருக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு அங்கு கடமையில் இருந்த இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையே காரணம்.

இவ்வாறு வன்னிப் பின்னடைவு குறித்து ஆராய்ந்த இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியவின் சிபாரிசுடன் கடந்த திங்களன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)


யூரோமைன்ட்
அக்ரிவ் மல்ரி டிரைக்சனல்
அன்டனாவில் பூஸ்டர் பொருத்தப்பட்டுள்ளது



* அனைத்து அலைவரிசைகளிற்கும் ஒரே அன்டனா
* ஜேர்மன் தொழில்நுட்பம்

LANKA NIPPON
No. 18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place, (Behind Milk Bar), Bambalapitiya Junction,
Colombo 4. Tel: 589992

(சி/10804)


## இரத்த தானம்

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த வாரம் இரத்த தானம் செய்தனர்.

பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் 19 பேரே இரத்த தானம் செய்தனர்.

இரத்த வங்கிக் குழுவொன்று பல்கலைக்கழகத்துக்குச் சென்று அங்கு வைத்து இரத்தத்தைப் பெற்றுக் கொண்டது. (ஐ-15-139)

## கண்காட்சிப் போட்டி

யாழ். விஞ்ஞான சங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் கண்காட்சிப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். குடாநாட்டின் பல முன்னணிப் பாடசாலைகள் இதில் பங்கு கொள்கின்றன. (க-10)

## குடாநாட்டின் புனரமைப்புக்கு இவ்வருடத்திற்கு 6 கோடி ரூபா

### ஐ.நா. தூதரகம் ஒதுக்கியது

யாழ்ப்பாணம், ஜன. 27
குடாநாட்டில் இந்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளுக்காக ஆறு கோடி ரூபாவை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஒதுக்கியுள்ளது.

இந்த அமைப்பின் உதவியுடன் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் இந்த நிதி ஒதுக்கீடு தொடர்பான விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்காக சிறிய வீடுகளை அமைத்து வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மூன்று பாடசாலைகளைப் புனரமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதைவிட சுயதொழில் வாய்ப்பை அளிப்பதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவது என்றும் அங்கு முடிவு செய்யப்பட்டது.

## ஆய்வுப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜன. 27
யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையின் அனுசரணையுடன் கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியாப் பல்கலைக்கழகத்துடன் யாழ். பல்கலைக்கழகம் இணைந்து நடத்த உள்ள 'புனரமைப்பும் புனரபிவிருத்திக்கான திட்டமும்' என்ற தலைப்பிலான ஆய்வுப்பட்டறை எதிர்வரும் பெப்ரவரி 12 ஆம், 13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்களான சிவச்சந்திரன், யோகராஜா ஆகியோரது முயற்சியுடன் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையால் மேற்கொள்ளப்பட்ட இந்த சர்வதேசக் கருத்தரங்கில் கனடாவிலிருந்து நான்கு பேராசிரியர்களும், பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த நிகழ்வின் போது எமது பிரதேசத்தில் அமைதிக்குப் பின் எவ்வாறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது பற்றியும் — நிர்வாக அமைப்பு, சனத்தொகை, பொருளாதாரம், சுகாதாரம், வீடமைப்பு, கல்வி, விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, உட்கட்டுமானம், கலை கலாசாரம், சமூக மேம்பாடு மற்றும் போக்குவரத்தும் தொடர்பாடலும் என்பவற்றிற்கு உரிய திட்டங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளன. (இ-8)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 27
யாழ். விஞ்ஞான சங்கம் நடத்தும் கருத்தரங்குத் தொடரின் மூன்றாம் பகுதி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் க. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும்.

''உலக மயமாக்கலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும்'' என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறைத் தலைவர் வி. பி. சிவநாதன் கருத்துரை வழங்குவார். (க-10)

## நீர் விநியோகக் குழாய் விஷமிகளால் உடைப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27
அராலி வடக்கு செட்டியார் மடம் பகுதியில் அமைந்துள்ள நீர் விநியோகக் குழாய் கடந்த 20 ஆம் திகதி இரவு விஷமிகள் சிலரால் உடைக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் உள்ள 45 வீதியோர தண்ணீர்க் குழாய்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இதனை அடுத்து அப்பகுதி சனசமூக நிலையங்களின் தலைவர்கள் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனிடம் இது குறித்து முறையிட்டனர்.

அதனை அறிந்து அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் நேற்று முன்தினம் முதல் குடி தண்ணீர் விநியோகம் சீராக்கப்பட்டுள்ளது (ஐ-6)


இன்று மங்களகரமான ஆரம்பம்
குமரன் கொமினிக்கேசன்
களபூமி, காரைநகர்.
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை உடன் பெற்றுக்கொள்ள இன்றே நாடவேண்டிய இடம்:
குமரன் கொமினிக்கேசன்
தொலை பேசி இல. உள்நாடு - 070-212978
வெளிநாடு - 0094-70-212978
(சி-10816)



ஆத்மசாந்திப் பிரார்த்தனை

கடந்த 28-12-1999 செவ்வாய்க்கிழமை கனடா நகரில் இறைபதம் எய்திய சுன்னாகம் சூராவத்தை

அமரர் செல்லப்பா சிவலிங்கம்

அவர்களை நினைவு கூர்ந்து இன்று (27-01-2000) வியாழக்கிழமை பகல் 10 மணியளவில் சூராவத்தை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் விசேஷ அபிஷேகமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை வழிபாடும் இடம்பெறும். இன்றிலும் இவற்றைத் தொடர்ந்து நடைபெறும் அன்னதானத்திலும் அடியவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அன்னை முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

யோகராணி கதிரமலைநாதன்,
வேலாயுதம் ஸ்ரீகாந்தன்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

சூராவத்தை,
சுன்னாகம்

(73086)



கண்ணீர் அஞ்சலி

கிட்டினர் சண்முகம்

தோற்றம்: 07-04-1948
மறைவு: 26-01-2000

எமது அச்சுவேலி ப.நோ. வள அபி. கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்ப காலப்பணியாளரும் நற்சேவையாளருமான கி. சண்முகத்தின் திடீர் மறைவு எம்மை ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியுள்ளது.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் சோகத்திலும் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
ப. நோ. வள அபி. கூட். சங்கம்,
அச்சுவேலி.

(73090)

# யாழ். கல்விக் கல்லூரி நிர்மாணம்: உடன் ஆரம்பிக்க அமைச்சர் பணிப்பு

## ஈ. பி. டி. பி. தூதுக்குழுவின் கோரிக்கையை ஏற்று

யாழ்ப்பாணம், ஜன. 27
யாழ்ப்பாணம் கல்விக் கல்லூரியை கோப்பாயில் நிறுவுவதற்கான நிர்மாணப் பணிகளை உடன் ஆரம்பிக்குமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான வே. குகேந்திரன் (வி. கே. ஜெகன்), சி. தவராசா, ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் கே. மதனராஜா ஆகியோர் நேற்று முன்தினம் கல்வி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டதாக ஈ. பி. டி. பி. அமைப்பு அறிவித்துள்ளது.

இதே வேளை மட்டக்களப்பு விபுலாநந்த இசை நடனக் கல்லூரியை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க வேண்டுமெனத் தாம் விடுத்த வேண்டுகோளை ஏற்ற கல்வி அமைச்சர் அது தொடர்பான பணிகளை உடன் ஆரம்பிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்குப் பணிப்புரை விடுத்ததாகத் தெரிவித்தார் எனவும்—

ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7-3)

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜன. 27
லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளர்களின் 99 ஆம் ஆண்டு மார்கழி மாதத்துக்கான சம்பளக் கொடுப்பனவுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## தேசிய கல்வி நிறுவக அனுமதிப் படிவங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 27
தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா – 2000 ஆம் ஆண்டுக்கான அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். இந்துக் கல்லூரி நிலையத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## காங்கேசனில் 13 கைதிகள்

யாழ்ப்பாணம், ஜன. 27
காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தற்போது 3 பெண்கள் உட்பட 13பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடை முகாமுக்கு நேற்றுச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இதனைத் தெரிவித்தார்:

கடந்த வாரம் படையினரால் தடை முகாமுக்கு அனுப்பப்பட்டவர்களின் விபரம் வருமாறு:-

முருகையா விஜயதாஸ் (கோப்பாய் மத்தி), பெரியதம்பி குகானந்தன் (இயற்றாளை, வரணி).

கடந்த வாரம் காங்கேசன் தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் எவரும் அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ-9)

# சாவகச்சேரிப் பகுதியில் இளைஞரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 27
சாவகச்சேரி டச் றோட் பகுதியில் தோட்டம் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக அவரின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கண்டி வீதிப் பகுதியைச் சேர்ந்த நடராஜா ராஜசுதன் (வயது 24) என்பவரே கடந்த 23 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார்.

சம்பவதினம் இவர் தோட்டத்தில் வேலை செய்யச்சென்றிருந்ததாகவும்—

பொழுது சாய்ந்தும் இவர் வீடு திரும்பாததால் உறவினர்கள் இவரைத் தேடித் தோட்டத்துக்குச் சென்றபோது இவரின் சைக்கிள் மட்டும் தோட்டத்தில் அநாதரவாகக் கிடந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-9)

# 90 சதவீத சலுகைக்கட்டணத்தில் மாணவருக்கான சீசன் ரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜன. 27
யாழ். குடாநாட்டின் பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டுக்களின் கட்டணக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் 12 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு 85 சதவீதச் சலுகையும் 12 வயது தொடக்கம் 21 வயது வரையான மாணவர்களுக்கு 80 சதவீதச் சலுகையும் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், பெப்ரவரி மாதம் தொடக்கம் வயதுக் கட்டுப்பாடு எதுவும் இன்றி 21 வயது வரையுள்ள அரச மற்றும் அரச உதவி பெறும் பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் முழுக்கட்டணத்தில் 90 வீத சலுகை வழங்கப்படவுள்ளது.

பெப்ரவரி முதல் நடைமுறைக்கு வரும் பஸ் கட்டணமும் அவற்றுக்கான மாதாந்த புதிய பருவகாலச் சீட்டுக் கட்டணமும் வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| ரூ. | 2-00 | — | ரூ. | 8-40 |
| ரூ. | 2-50 | — | ரூ. | 10-50 |
| ரூ. | 3-50 | — | ரூ. | 14-70 |
| ரூ. | 4-00 | — | ரூ. | 16-80 |
| ரூ. | 4-50 | — | ரூ. | 18-90 |
| ரூ. | 5-00 | — | ரூ. | 21-00 |
| ரூ. | 5-50 | — | ரூ. | 23-10 |
| ரூ. | 6-50 | — | ரூ. | 27-30 |
| ரூ. | 7-00 | — | ரூ. | 29-40 |
| ரூ. | 7-50 | — | ரூ. | 31-50 |
| ரூ. | 8-00 | — | ரூ. | 33-60 |
| ரூ. | 8-50 | — | ரூ. | 35-70 |
| ரூ. | 9-00 | — | ரூ. | 37-80 |
| ரூ. | 9-50 | — | ரூ. | 39-90 |
| ரூ. | 10-00 | — | ரூ. | 42-00 |

பெப்ரவரி மாதத்துக்கான பருவ கால சீட்டுக்கள் இம்மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## கட்டுப்பெத்தை விரிவுரைகள் முதலாம் திகதி

யாழ்ப்பாணம், ஜன. 27
1998 இல் ஜி.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றி கட்டுப்பெத்தை பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலை மற்றும் அளவையியல் கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு, பதிவு செய்து கொண்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளன. இதற்கான அழைப்புக் கடிதங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் மாணவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-6)

# தீவகமாணவர் அபிவிருத்தி கழகம் வறியதீவக மாணவருக்கு உதவும்

யாழ்ப்பாணம், ஜன 27
தீவகப் பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் முகமாக யாழ். பல்கலைக்கழக தீவக மாணவர் அபிவிருத்திக் கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், எழுது கருவிகள், காலணிகள் என்பனவற்றுடன் ஜி. சி. ஈ. உயர்தர மற்றும் சாதாரணதர மாணவர்களுக்கான வினாவிடை நூல்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

வறிய மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்படவுள்ளன என்றும் —

எனவே தீவகப் பகுதி பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையில் உள்ள வறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களின் பட்டியலை யாழ். பல்கலைக்கழக தீவக மாணவர் அபிவிருத்திக் கழகத்துக்கு அனுப்பி வைக்குமாறும் — கழகத் தலைவர் ரீ. தனேந்திரன் தெரிவித்தார். (இ-9)

# இரத்ததானம் செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27
பிறந்த நாள் மற்றும் மறைந்தவர்களின் ஞாபகார்த்தமாக யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்குமாறு இரத்த வங்கிப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரத்தம் வழங்க விரும்புபவர்கள் இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டால் தேவை ஏற்படும் நேரங்களில் அவர்களிடமிருந்து இரத்தம் பெற்றுக் கொள்ளப்படும் என்றும்—

பாடசாலைகள், இளைஞர் அமைப்புகள் மற்றும் பொது நிறுவனங்களைச் சேர்ந்தோர் இரத்ததானம் செய்ய விரும்பினால் அவர்களின் இருப்பிடங்களுக்கு நேரில் வந்து இரத்தத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும்—

வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இரத்ததானம் செய்வதனால் புதிய இரத்தம் உருவாக்கப்படுவதுடன் கொழுப்பு அதிகரிப்பது கட்டுப்படுத்தப்பட்டு நோய்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன என்று யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் எஸ். சிவசங்கர் தெரிவித்தார். (ஜ-5)

# மீண்டும் கத்தி வெட்டுக்கு இலக்கானார்

நெல்லியடி, ஜன. 27
ஏற்கனவே வாள்வெட்டுக்கு இலக்காகிக் கைவிரல்களில் காயங்களுடன் மந்திகை மருத்துவமனை வாட்டில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் மறுநாள் மீண்டும் கத்தி வெட்டுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கரவெட்டியில் இடம்பெற்றது.

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த பொன்னன்—இரத்தினம் (வயது 45) என்பவரே இடதுபக்கத் தோள்மூட்டில் கத்திவெட்டுக்கு இலக்காகி மீண்டும் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஓடியோ மூலம் விரிவுரை

சுவாமி சாந்தானந்தா சரஸ்வதி சுவாமிகளின் விரிவுரைகள் அடங்கிய ஓடியோ ஒலிபரப்பு நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தினமும் பிற்பகல் 5.25 மணி முதல் 6.15 மணி வரை யாழ். கோயில் வீதியில் உள்ள 48 ஆம் இலக்க இல்லத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில், 'மலரும் ஆன்மா' என்னும் தலைப்பிலான விரிவுரை ஒலிபரப்பப்படும். (இ-3)

## பரிசளிப்பு

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்களின் விவசாய வார இறுதி நாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

விவசாய பீடாதிபதி பொறியியலாளர் ஏ. விஜயரட்ணம் இந்த நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

# சமகால நிகழ்வுகளைச் சிறப்பாக வெளிப்படுத்தும் ஆற்றல் உள்ளவர்

## பத்திரிகையாளர் வீ. சின்னத்தம்பிக்குப் பாராட்டு

"சிறந்த பத்திரிகையாளர் ஒருவருக்கு இன்று மணிவிழா நடைபெறுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவர் சமகால நிகழ்வுகளைக் கட்டுரை வடிவத்தில் வெளிப்படுத்திய சிறந்த கட்டுரையாளர். அத்துடன் கல்விமான்களையும் கலைஞர்களையும் பேட்டி காண்பதில் சிறந்தவர்."

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

மூத்த பத்திரிகையாளரும் கம்யூனிஸ்ட் வாதியுமான வீ. சின்னத்தம்பிக்கு கடந்த ஞாயிறு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் மணிவிழா நடத்தப்பட்டது.

அந்த மணிவிழாவின்போது ஆசியுரை கூறுகையிலேயே மேலதிக அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சி. சபாநாதன் தலைமையில் மணிவிழா நிகழ்வுகள் நடைபெற்றன.

மணிவிழா நாயகன் வீ. சின்னத்தம்பியும் பாரியாரும் கல்லூரி இல்லத்தை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இருந்து பொது மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோரால் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

மேலதிக அரசாங்க அதிபர் தனது ஆசியுரையில் தொடர்ந்து கூறுகையில் சமூக நலனுக்காகவும் வறிய மக்களின் முன்னேற்றத்துக்காகவும் உழைத்த சமூக சேவையாளர் சின்னத்தம்பி. இவருடைய சமூகப் பணி, பத்திரிகைத்துறை மென்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகின்றோம் — என்றார்.

மணிவிழாக் குழுவினர் சார்பில் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசா மணிவிழா நாயகனுக்கு, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

கலாநிதி குணராசா தனது உரையில் புலம்பெயர்ந்த மக்களின் துயரங்களையும் அவர்களின் உணர்வுகளையும் "ஓ கனடா" என்ற நாவலில் தத்துவரூபமாக இவர் வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய நிலையில் இவர் தொடர்ந்தும் தனது பணியைத் தொடர வேண்டும் இவருக்கு இறைவன் நல்ல ஆரோக்கியத்தையும் ஆயுளையும் வழங்கவேண்டும் — என்றார்.

பத்திரிகையாளர்கள், பொது மக்கள், மாணவர்கள் ஆகியோர் மணிவிழா நாயகனுக்கு மாலைகள் அணிந்தும் பொன்னாடைகள் போர்த்தியும் கௌரவித்தனர். இவர் பிறந்த ஊரில் இருந்தும் பல சங்கங்களின் பிரதிநிதிகள் வந்து பாராட்டுப் பத்திரங்களை வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஜப்பானியப் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா, வலிகாமம் மேற்கு, பிரதேச செயலர் கா. சந்திரராசா, புத்தொளி ந. சிவபாதம், போரூட் திட்ட இணைப்பாளர் க. குணேந்திரதாசன், யாழ். மாவட்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் இ. தவநாதன் ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் க. முருகவேள் உட்பட இன்னும் பலர் வாழ்த்துரை வழங்கினர். பதுர்கவி காரை எம். பி. அருளானந்தம் வாழ்த்துக் கவிகள் பாடினார். தமிழ் மொழி கற்பித்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்னும் தலைப்பில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் ஆய்வுரையும் இடம்பெற்றது. விழா நாயகன் வீ. சின்னத்தம்பி பதிலுரையாற்றினார். (இ-175)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு:

# சுகாதாரப் பரிசோதகர் மீது கோண்டாவிலில் தாக்குதல்!

சுதுமலை,ஜன.27

கோண்டாவில் மேற்குப் பகுதியில் கட்டாக்காலி நாய்களை 'நஞ்சூட்டி அழிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொதுச்சுகாதார பரிசோதகர் ஒருவர் நேற்றுமாலை இளைஞர் குழு ஒன்றினால் கட்டில் சட்டங்கள் மற்றும் பொல்லுகள் கொண்டு பலமாகத் தாக்கப்பட்டார்.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்துக்கு அருகில் கட்டாக்காலியாகத் திரிந்த ஊர்நாய் ஒன்று வீதியில் வீசப்பட்ட - நஞ்சு பூசப்பட்ட - இறைச்சித் துண்டைக், கவ்விச் சென்று அங்குள்ள வீடு ஒன்றுக்குள் சென்று சத்தி எடுத்ததாகவும் -

அந்த வீட்டிலிருந்த பொமேரியன் நாய்கள் இரண்டு அந்த இறைச்சித் துண்டை சாப்பிட்டதால் உயிரிழந்தன என்றும் - கூறப்படுகிறது.

இதனை அடுத்தே மேற்படி தாக்குதல் இடம்பெற்றது. அதேவேளை அப்பகுதிக்கு மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த சிலர் தமிழ்க் கட்சி ஒன்றின் பெயரைக்கூறி அவரைத் தாக்கியதாகவும் கூறப்படுகின்றது.

சுகாதாரப் பரிசோதகரின் அடையாள அட்டையை கிழித்தெறிய முற்பட்ட அந்தக்குழு அவரிடமிருந்து பலவந்தமாகக் கடிதமொன்றில் ஒப்பம் பெற்றுச் சென்றதாகவும் தெரிகிறது.

கட்டாக்காலி நாய்களை அழிக்கும் முயற்சியிலோ வியாபார நிலையங்களில் காலாவதியான பொருள்களை இனங்கண்டு அழிக்கும் முயற்சிகளிலோ ஈடுபடக்கூடாது என்றும் அக்குழுவினால் அவர் மிரட்டப்பட்டாராம்.

சம்பந்தப்பட்ட சுகாதாரப் பரிசோதகர் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-7-139)

# புலிகளுடன் உடன் பேச வற்புறுத்துகிறது நோர்வே!

கொழும்பு,ஜன.27

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இலங்கை அரசின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்றால் அரசு உடனடியாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நோர்வே வெளிவிவகார துணை அமைச்சர் லெவி லுட்டி கொழும்பில் பதில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவை நேற்று சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளிடையேயும் இணக்கம் ஏற்படுவது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது விடயத்தில் சகல கட்சிகளுக்குமிடையே நல்லிணக்கம் ஏற்படும் பட்சத்தில் சமாதானப்பேச்சுக்கள் உடன் ஆரம்பமாகும் என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நோர்வே துணை வெளிவிவகார அமைச்சரிடம் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் சிலரையும் நோர்வே அமைச்சர் தலைமையிலான குழு நேற்று சந்தித்து உரையாடியது.

(உ-6)

## விசாரணை நேற்று ஆரம்பம்

கொழும்பு,ஜன.27

ஐ.தே.கவில் இருந்து தாம் வெளியேற்றப்பட்டதை எதிர்த்து கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணைகள் நேற்று ஆரம்பமாகின.

சரத் அமுனுகம, சூல பண்டார, சுசில் முனசிங்க, விஜயபால மென்டிஸ், நந்தா மத்தியூ ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே அந்த ஐவருமாவர்.

அரசுக்கு ஆதரவு தெரிவித்தனால் இவர்கள் ஐ.தே.கவிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என்பது தெரிந்ததே.

இந்த மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும்.

பதில் பிரதம நீதியரசர் ஏ.ஆர்.வி.சமரக்கோன், நீதியரசர்கள் ஷிரானி பண்டாரநாயக்க, ஏ.இஸ்மாயில் ஆகியோர் இந்த மனுக்களை விசாரணை செய்கின்றனர்.

## இலவசப் பாடநூல்கள் வருகின்றன

கொழும்பு,ஜன.27

யாழ மாவட்ட பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கான இலவச பாடநூல்கள் 'கிரிந்த' கப்பல் மூலம் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்கப்பல் இன்று அல்லது நாளை காங்கேசன்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது.

2 ஆயிரத்து 368 பொதிகளில் - 16 லொறி 'லோட்' அளவுக்கு - இலவசப் பாடநூல்கள் இக்கப்பலில் ஏற்றப்பட்டுள்ளன.

பாட நூல்களை ஏற்றுவதற்கான ஒத்துழைப்பு மற்றும் வசதிகளை யாழ். அரச அதிபரின் கொழும்புச் செயலகம் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இந்தியா தோல்வி

மெல்போர்ண்,ஜன.27

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் மூன்று நாடுகள் பங்குபற்றும் "கால்ட்டன் அன் யுனைட்டட்" போட்டித் தொடரில் நேற்று ஆஸ்திரேலியா - இந்தியா ஆகிய அணிகளுக்கு இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் 152 ஓட்டங்களால் இந்திய அணி தோற்றுப்போனது.

இத்தோல்வி காரணமாக இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் பங்குபற்றும் தகுதியை இந்தியா இழந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## பெரும் தாக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். இதுவும் ஒரு வகையில் கட்டாய இராணுவ சேவைக்கான முன்னேற்பாடே. புலிகளின் பெரும்தாக்குதல் முஸ்தீபுக்கான முன்னாயத்தங்களில் இதுவும் ஒன்று" - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் -

ஆனையிறவுத் தளம் மீது அல்லது தனங்கிளப்புப் பகுதி ஊடாக ஒரு தாக்குதலுக்குப் புலிகள் முயற்சிக்கக்கூடும் என்று யாழ்ப்பாணத்தில் படை உயர் வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிகின்றது.

"ஆனையிறவில் ஒரு பெருஞ்சமர் வெடித்தால் அது துருப்புக்களின் எண்ணிக்கையில் (Man Power) தங்கியிருப்பதிலும் பார்க்க குண்டுத் தாக்குதல் வலுவில்தான் (Fire Power)அதிகம் தங்கியிருக்கும்" என்றார் யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் இராணுவ அதிகாரி ஒருவர்.

"புலிகளின் குண்டுத்தாக்குதல் வலு (Fire Power) என்னவென்பது குறித்து எம்மிடம் உள்ள தற்போதைய மதிப்பீடு சரியானதாக இருக்குமானால் ஆனையிறவில் புலிகளின் எந்த முயற்சியும் பலிக்கப் போவதில்லை என்பதை உறுதி கூற முடியும்" - என்றும் அவர் சொன்னார். (உ)

## சட்டவிரோத மின்பாவனை வாரம் 10 பேர் சிக்குகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு வாரமும் சராசரி பத்து சட்டவிரோத மின்பாவனையாளர்கள் மின்சாரசபை அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டு இணைப்புத் துண்டிக்கப்படுவதுடன் மின்வயர்களும் பறிமுதல் செய்யப்பட்டு வருவதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

சில இடங்களில் சட்டரீதியாக மின் இணைப்பு பெற்றவர்கள் தமது வீடுகளுக்கு அருகிலுள்ள வீடுகளுக்கு சட்டவிரோதமாக மின்சாரம் வழங்கி வருவதும் மின்சாரசபை அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (உ-5-10)

# மாகாணப் பணிப்பாளர் பதவி சிவானந்தனுக்கு!

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் கே.கந்தசாமி அடுத்து வரும் மாதங்களில் ஓய்வு பெறுவதை அடுத்து அந்த இடத்துக்கு தற்போதைய மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன் நியமிக்கப்படுவார்.

திருகோணமலை நிலாவெளி 'ஓஷானிக்' ஹோட்டலில் கடந்த சிலநாள்களாக நடைபெற்று வந்த கல்விப்பணிப்பாளர்களின் கலந்துரையாடலில் இதுபற்றிய அறிவிப்பு விடுக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது.

இதற்கிடையில் -

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காகச் சென்றிருந்த கலாநிதி தணிகாசலம்பிள்ளை இன்று யாழ். திரும்புகின்றார்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராகப்பணிபுரிந்த தணிகாசலம்பிள்ளை மூன்று மாத கல்வி முறைப் பயணமாக வெளிநாடு சென்றிருந்த சமயம் - கடந்த நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் - யாழ்ப்பாணமாவட்டத்துக்குப் பொறுப்பான மேலதிக கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அவரது இடத்துக்கு புதிய யாழ். வலயக் கல்விப்பணிப்பாளராக திருமதி மகாலிங்கம் பதவியேற்றார்.

நாடுதிரும்பிய கலாநிதி தணிகாசலம்பிள்ளைமேலதிகக் கல்விப்பணிப்பாளர் பதவியை ஏற்க மறுத்து, வலயக் கல்விப்பணிப்பாளர் பதவியை தமக்கு மீள வழங்கும்படி வற்புறுத்தி வந்தார்.

திருகோணமலையில் நடந்த கலந்துரையாடல்களின் பின்னர் மேலதிகக் கல்விப்பணிப்பாளர் பதவியை ஏற்கும்படி அவர் தற்போது மேலதிகாரிகளால் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

எனினும் அவரை வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வெளியே சேவைக்கு அனுப்பிவைக்கும் முயற்சி ஒன்றும் மேல்மட்டத்தில் எடுக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது. (உ)

# 4, 660 குடும்பங்களுக்குரிய நிவாரணம் வன்னியில் வெட்டு

வவுனியா. ஜன.27

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து 4 ஆயிரத்து 660 குடும்பங்களுக்கு நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் காலத்துக்குக் காலம் இடம்பெற்றுவரும் நிவாரண விநியோக மீளாய்வின் அடிப்படையிலேயே இந்த நிவாரணக் குறைப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் -

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு இந்த மாதம் அனுப்பப்பட வேண்டிய 474 லொறி உணவுப் பொருள்களில் இதுவரை 379 லொறி பொருள்களே அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.


ENGLISH COURSE
for
G.C.E. "A" LEVEL
2002, 2001
❊ ஆங்கில மொழி ❊
கற்கைநெறி
ஆரம்பம்: 31.01.2000 பி.ப. 3.30
ஆசிரியர்: த.ந.பஞ்சாட்சரம்
மேலதிக விவரங்களுக்கு
நிர்வாகி
NEW SCIENCE HALL
KANNATHIDDI,
JAFFNA.
(73096)

A/L 99
தமிழ்
திரு. பாலா
மீட்டல் வினா - விடை
ஆரம்பம்: 28-01-2000
காலை – 7.00மணி
(புதிய நேரம்)
பொருளியற் கல்லூரி
(யாழ்.கிளை நிறுவனம்)
கே.கே.எஸ். றோட்,
இணுவில்.
(73108)

STP COMPUTER WORLD
NO.54A.,Palaly Road,
Kantharmadam,
Jaffna.
T.P :- 021 - 2674
E-mail :- stpcom @ sltnet.lk
Reg No: NAL/SD/377
புலமைப் பரிசில் திட்டம் - 2000
தேர்வுப் பரீட்சைகள் 06 – 02 – 2000 (ஞாயிறு) காலை 10.00 மணி.
X முன்னைய விளம்பரத்தில் உள்ளது போல் 04-02-2000 இல் நடைபெறாது.
அனுமதிப்பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். 03.02.2000 வரை அனுமதிப்பத்திரங்கள் கிடைக்காவிடின் காசுக் கட்டளை/ பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் தொடர்புகொள்ளவும்.
இயக்குநர்.
(C/10824)

A/L 2000
PAPER CLASS
* தமிழ்:-திரு. கமலடுபன்
* இந்து நாகரிகம்
திரு. ராஜேஸ்கண்ணன்
ஆரம்பம் :- 29.01.2000
சனி - 5.00 p.m
MATHS CENTRE
NELLIADY
(C/10799)

THE EXPRESS INSTITUTE
A BOON TO STUDENTS
A/L 2001 & 2002
இணைந்த கணிதம்
திரு. N.A.சயனன்
இரசாயனம்
திரு.மகேஸ்வரன்
உயிரியல்
திரு.லோகேஸ்
பௌதிகம்
திரு.சம்பந்தன்
பொருளியல்
திரு. இராஜேஸ்
கணக்கீடு
திரு. பாலா
வணிகக்கல்வி
திரு.உதயமோர்கன்
ஆங்கிலம்
திரு.தெய்வதவபாலன்
அளவையியல்
திரு.ஜெயசுரேஷ்
தமிழ்
திரு.தமிழிந்திரன்
இந்துநாகரிகம்
திரு.இராஜேஸ்கண்ணன்
புவியியல்
திரு. கந்தசாமி
அமைதியான சூழலில்
அனுபவம் மிக்க ஆசிரியர்களின் விரிவுரைகள்
மட்டுப்படுத்திய எண்ணிக்கையான மாணவர்கள்
ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த கட்டமைப்பு.
(73084)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.